விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை (03.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 227

Registered as a Newspaper in Sri Lanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சிமெந்து ராம்கோ

# பிரபாகரனின் மனவுறுதியை குறைத்து மதிப்பிட்டு விட்டேன்!



## 'யாழில் பிரபாகரனை தூக்கிலிட ஜே.ஆர். திட்டமிட்டார்' - நட்வர் சிங் வாக்குமூலம்

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை தம்மிடம் கையளிக்குமாறும், தாம் அவரை யாழ்ப்பாணத்தில் வைத்து தூக்கிலிட வேண்டும் என்றும்முன்னாள்ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன கோரிககை விடுத்தார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியிடம் 1986 ஆம் ஆண்டு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்தியாவின் முன்னாள் அமைச்சர் நட்வர் சிங் தனது சுயசரிதை நூலில் இந்த விபரங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளர். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1986ஆம் ஆண்டு பெங்களூரில் இடம்பெற்ற சார்க் மாநாட்டின் போது இந்தக் கோரிக்கையை ஜே.ஆர். ஜெயவர்த்தன ராஜிவ் காந்தியிடம் விடுத்தார்.

இம்மாநாட்டின் போது பிரபாகரனை ஜெயவர்த்தனவுடன் சந்திக்க வைத்து, இலங்கையின் இனப்பிரச்சினையை அரசியல் தீர்வு காணும் முகமாக பிரபாகரனை பெங்களூருக்கு வருமாறு புதுடில்லி கேட்டுக்கொண்டது.

இதன்போது பிரபாகரனின் பெங்களூர் வருகையை தாம் இரகசியமாக வைத்திருந்தபோதும, எப்படியோ ஜே.ஆர்

24ஆம் பக்கம் பார்க்க....



# கூட்டமைப்புக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை

## அரசாங்கம் மிரட்டல்

**(கொழும்பு) இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகளினால் நடத்தப்படும் சர்வதேச விசாரணைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாட்சியமளித்தால் கூட்டமைப்பிற்கு எதிராக போர்க் குற்றச்செயல் விசாரணைகளை நடத்தவுள்ளதாக அரசாங்கம் எச்சரித்துள்ளது.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனினால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றச் செயல்களுக்கு தமிழ்த தேசியக் கூட்டமைப்பினர் உடந்தையாக செயற்பட்டனர் என்ற அடிபபடையில் விசாரணைகளை நடத்த நேரிடும் எனவும்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்புக்கள் மற்றும் பேச்சுவார்த்தைகள் குறித்த ஆவணங்கள் முல்லைத்தீவு பதுங்குகுழியொன்றிலிருந்து மீட்கப்

24ஆம் பக்கம் பார்க்க....

## கச்சதீவில் தஞ்சமடையும் மீனவர் போராட்டம் வாபஸ்



(கச்சதீவு)

கச்சதீவில் வெள்ளைக் கொடியுடன் தஞ்சமடையும் போராட்டத்தை இராமேஸ்வரம் மீனவர்கள் இந்திய மத்திய இணையமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன்உறுதிமொழியை ஏற்று கைவிட்டனர்.

இலங்கை சிறைகளில் உள்ள 94 மீனவர்களையும் 62 விசைப் படகுகளையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், கச்சதீவல் மீன்பிடிக்கும்

23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைக்கு அழுத்தம் பிரித்தானியா உறுதி !

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பில் தொடர்ந்தும் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பிரித்தானிய அரசாங்கம் வெளியட்டுள்ள மனித உரிமைகள் அறிககையின் பிந்திய தகவல்களில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து ஜூன் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு பிரித்தானியா அறிக்கை வெளியிட்டுள்ளது.

முஸ்லிம் மற்றும் சிங்களவர்களுக்கு மத்தியில் நாட்டின் தென்பகுதியில் வன்முறை

23ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்பு,வெளிவிவகாரம் தவிர ஏனைய அதிகாரங்கள் வேண்டும்

### சம்பந்தன் அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரம் தவிர்ந்த அதிகாரங்களை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் மாவட்டங்களுக்கான அதிகாரங்களையும் அரசாங்கம் பரவலாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கலந்துரையாடல் ஒன்றில் சம்பந்தன இதனை குறிப்பிட்டுள்ளார்.

நிதி, போக்குவரத்து, காடுகள், துறைமுகம், விமான சேவைகள் உட்பட 41 அதி

23ஆம் பக்கம் பார்க்க....



SISIL
உங்கள் சமையலறையை அழகுபடுத்த
Sisil, Sharp, Moulinix, Tefal, Krups, Kenwood
தரும் சமையல் உபகரணங்கள்
- 120 நாள் வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- 3வருட நீடித்த உத்தரவாதம்
- விசேட பரிசுப்பொருட்கள்

இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(C-8104)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

A.V றோட் அரியாலை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 6 1/2 பரப்புக் காணி பயன்தரும் மரங்களுடன் விற்பனைக்கு உண்டு. ராணி வீதியில் வீடும் வாடகைக்கு உண்டு. த்ரகர் தேவையில்லை. (7200)

தொடர்புகளுக்கு : 0779789375, 0775173798

## Personal Class

**MATHS**

6 தொடக்கம் 11 வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வீட்டில் வந்து கணிதம் (தமிழ்மொழி மூலம்) அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். (7203)

தொடர்பு 0750441011

## ALL OUT
Pest Control Service

கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை
உத்தரவாதத்துடன்
பாதுகாத்துக் கொடுக்க
நாங்கள்
இருக்கின்றோம்



(7204)

தொடர்புகளுக்கு
ந.ரூபகாந் : 0771515889, 0214993200


# இலங்கை விவகாரம்! முடிந்த விடயம் சாமி வக்காலத்து

(புதுடில்லி)

தமிழக முதல்வர் குறித்து அவதூறாக கருத்து வெளியிட்டதற்கு இலங்கை மன்னிப்பு கேட்டதால், அந்த விவகாரத்தை முடிந்து போனதாக கருத வேண்டும் என சுப்பிரமணியசாமி கூறியுள்ளார்.

தமிழக மீனவர்கள் கைது விவகாரம் குறித்து முதலமைச்சர் ஜெயலலிதா, பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதம் குறித்து மிகவும தரக்குறைவாக விமர்சனங்கள் செய்து இலங்கையின் பாதுகாப்பு அமைச்சக இணையத் தளத்தில் கட்டுரை வெளியாகியிருந்தது.

இதற்கு தமிழக அரசியல் கட்சிகள் உள்பட பல்வேறு தரப்பில் இருந்து எதிர்ப்புகள் கிளம்பியது. இதையடுத்து, இலங்கை நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டது.

இந்நிலையில், இதுகுறித்து கருத்து தெரிவித்த பா.ஜ.க தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியசாமி கூறுகையில்,

ஜெயலலிதா குறித்து அவதூறு கருத்தை இணையத்தளத்தில்வெளியிட்டதற்காக இலங்கை மன்னிப்பு கேட்டிருப்பதால், இந்த விவகாரத்தை முடிந்து போனதாகக் கருத வேண்டும்.

மேலும், இந்திய வெளியுறவுக்கொள்கையில் தமிழக அரசு தலையிட முடியாது என்றார்.

# பலரை போர்க்குற்றம் சாட்டியவர்கள் ஜனாதிபதி நியமித்த நிபுணர்கள்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் காணாமல் போனவர்கள் தொடர்பான ஆணைக்குழுவின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ள மூன்று சர்வதேச நிபுணர்கள் முக்கிய அரச தலைவர்களை போரக்குற்ற நீதிமன்றத்திற்கு அனுப்பியவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

சாதம் உசைன், சார்ள்ஸ் டெய்லர், ஸ்லோபோடன் மிலோசவிக் ஆகிய வெளிநாடுகளின் ஜனாதிபதிகளை இவர்கள் போர்க குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்தவர்கள் என்று திவயின பத்திரிகை கூறியுள்ளது.

அத்துடன் யூகோஸ்லாவியாவை துண்டு துண்டாக பிரிக்க இவர்கள் உதவியுள்ளனர்.

இந்த மூன்று வெளிநாட்டு நிபுணர்களில் ஒருவரான அரச சட்டத்தரணி டொஸ்மண்ட் டி சில்வா, பிரித்தானிய சட்டவாதியான சேம் பிராங்னனின் கொலையை மூடிமறைத்தவர் என சட்டவாதியின் மனைவி குற்றம் சுமத்தியுள்ளார்.

அரச தலைவர்களை சர்வதேச நீதிமன்றத்திற்கு அனுப்பி அவர்களை சிக்கலில் மாட்டிய இந்த மூன்று வெளிநாட்டு நிபுணர்களுக்கு தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

# குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய மண்டபத்தில் தலைவர் எ.வி. கணேசலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

✦✦✦✦✦✦

யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

வி.பிரசாத் தலைமையில் இடம்பெறும் மேற்படி குருபூசையில் விசேட பூசை வழிபாடு, பஜனையைத் தொடர்ந்து நடனம், பேச்சு, பாடல் என கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

# யாழ்ப்பாணத்தில் 12 பேருக்கு டெங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஒரு வயதுக் குழந்தை உட்பட 12 பேர் கடந்த வாரத்தில் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரி, தெல்லிப்பளை, நல்லூர், உடுவில், சங்கானை, வேலணை, யாழ்ப்பாணம் ஆகிய சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த டெங்கு நோயாளர்கள் அனைவரும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


## தேவை

கட்டிட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவராய் மேசன்/செடலின் பாஸ்/கம்பிபாஸ்/பெயின்டர் (1200/-1600/-), கையுதவியாளர் (900/-1100/-) தங்குமிடம் இலவசம். மேலதிக விபரங்களுக்கு.

தொடர்பு: 0775561883 (பி-8102)


# சர்வதேச விசாரணை ஜெனீவா வழி முடிவு

(புதுடில்லி)

இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணைக்காக, இந்தியாவிற்குள் பிரவேசிப்பதற்காக தனிநபர்கள் எவராவது விசா அனுமதியை கோரினால், அது குறித்த முடிவு, ஜெனீவா தீர்மானம் குறித்து எடுக்கப்பட்ட நிலைப்பாடுகளை அடிப்படையாக வைத்தே எடுக்கப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் சையத் அக்பருடின் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணைக்காக, இந்தியாவிற்குள் பிரவேசிப்பதற்காக தனி நபர்கள் எவராவது விசா அனுமதியை கோரினால், நாங்கள் தீர்மானத்தின் மீது வாக்களிக்காத அதேவேளை விசாரணை ஆணைக்குழு தொடர்பாக குறிப்பிடப்பட்டு இருந்ததற்கு எதிராக வாக்களித்துளோம் இவற்றை அடிப்படையாக வைத்தே இந்த விடயத்தில் தீர்மானம் எடுப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.


## பிள்ளையார் இன் உணவகம்
PILLAIYAR INN HOTEL & RESTAURANT

மேலும் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு எமது உணவகம் காலை 8 மணியிலிருந்து இரவு 11 மணிவரையும் திறந்திருக்கும்.

இந்திய சமையல் வல்லுநரின் சாப்பாடுகளும் தோசை, மசாலா தோசை, வடை, சப்பாத்தி, பூரி, மதிய உணவுகள் சிற்றுண்டிகளுடன் தயாரித்து வழங்கப்படும். ஒருமுறை விஜயம் செய்து ருசித்துப்பாருங்கள்.

Email:- pillaiyar.in@gmail.com
Web:-www.pillaiyarinn.com (C-809)
Tel-021 222 2829
Fax- 021 222 4449

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உருப்படைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-8096)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER

## வேலைவாய்ப்பு

யாழ்.குடாநாட்டில் முதன்மை நிறுவனமான Optimo International சர்வதேச நிறுவனத்திற்கு நிலையான 15 பதவிவெற்றிடங்களுக்கு நேர்முகத் தேர்வு ஆரம்பமாகின்றது. விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு உங்களுக்கான நேரத்தினை உறுதிப்படுத்துங்கள்.

- தகைமை O/L மட்டும் போதுமானது
- முன் அனுபவம் அவசியமில்லை

(7205)

தொடர்புகளுக்கு: 0770771377, 0771908997

## நிரந்தர வேலைவாய்ப்பு

பல வெற்றிடம் தனியார் துறைமுகம்/விமான நிலையம்/தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தவர்கள் வெற்றிடம். கப்பல் புனர்நிர்மாணித்தல் சாதாரண ஊழியர்கள்/வெல்டர்/சுத்திகரிப்பாளர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தவர்கள் (JSO/LSO/SSO/OTC) போன்ற பிரிவுக்கு வெற்றிடம். (கொழும்பை அண்மித்த பிரதேசங்களில்) தொழில் அடிப்படையில். சம்பளம் 20000/-, 35000/-. உணவு, தங்குமிடம் சகாய விலைகளில். மேலதிக விபரங்களுக்கு.

தொடர்பு: 0775561883 / 0776838231 (C-8101)

## தொழில்வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/கோடியல்/பிஸ்கட்/டொபி/PVC/வாசனைத் திரவியம்/சொக்லட் போன்றவற்றுக்கு ◆ உற்பத்தி ◆ லேபல் ◆ தரம்பிரித்தல் பிரிவுக்கு 18-50 வயது ஆண்-பெண் தேவை. மற்றும் தனியார் துறைமுகம், விமான நிலையம், பாதுகாப்பு உத்தியோத்தர்களுக்கும் பல வெற்றிடம். தொழில் அடிப்படையில் சம்பளம் 18,000/-, 35,000/-. உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில். வருகைதரும் நாளிலே வேலை வாய்ப்பு.

தொடர்பு:- 0778430179

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532


# இலங்கை தூதரகத்தை மூடுங்கள்; திரையுலகம் நாளை ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழக முதல்வரை அவமதித்த இலங்கையின் துணைத் தூதரகத்தை இழுத்து மூடக் கோரி தமிழ் திரையுலகினர் நாளை 4 ஆம் திகதி போராட்டத்தில் குதிக்கின்றனர்.

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்தில் தயாரிப்பாளர் சங்கம், நடிகர், நடிகைகள், அனைத்து தொழில்நுட்ப கலைஞர்கள் பங்கேற்கின்றனர்.

திரளாகப் பங்கேற்குமாறு பொது மக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த இயக்குநர்கள் சங்கத்தினர் இந்தப் போராட்ட அறிவிப்பினை வெளியிட்டனர்.

அதில், தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பவரான நமது தமிழக முதல்வரை இலங்கை அரசு உள் நோக்கத்துடன் ஆபாசமாகச் சித்தரித்து அவமானப்படுத்தியுள்ளது.

எல்லா பாதிப்புகளையும் ஏற்படுத்திவிட்டு இப்போது நிபந்தனையற்ற மன்னிப்பு எனும் போர்வைக்குள் ஒளிந்து கொள்ளப்பார்க்கிறது.

தொடர்ந்து தமிழர்களின் உணர்வுகளைப புறக்கணிப்பதோடு, நமது முதல்வரையும் அவமானப்படுத்தும் விதத்தில் நடந்து கொள்ளும் இலங்கையின் ஒட்டு வாலாக விளங்கும் இலங்கை துணைத் தூதரகம் தமிழகத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்.

இந்த துணைத் தூதரகத்தை உடனடியாக மூடக்கோரி, தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கமும், தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கமும் சென்னையில் உள்ள அந்த தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்யவிருக்கிறோம்.

நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பொது மக்களும் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அந்த அறிவிப்பில் தெரிவித்துள்ளனர்.

# ஜெயலலிதா பற்றி அவதூறு மதுரை ஆதீனம் கண்டனம்

(சென்னை)

தமிழக முதல்அமைச்சரை பற்றி அவதூறாக செய்தி பரப்பிய இலங்கைக்கு மதுரை ஆதீனம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மதுரை ஆதீனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,


இலங்கை வாழ் தமிழ் மக்களுக்காகவும், தமிழகத்தில் உள்ள மீனவ சமுதாயத்திற்காகவும், பல்லாண்டு காலம் குரல் கொடுத்து வருபவர் நம் முதல் அமைச்சர். இந்திய பிரதமருக்கு அடிக்கடி கடிதம் எழுதியும், சட்டமன்றத்தில் பலமுறை தீர்மானங்கள் நிறைவேற்றியும் அயராது உழைத்து வருபவர் முதல்வர் ஜெயலலிதா.

தமிழக முதல்வருக்கு அதிகாரம் இருந்தால் உடனடியாக இலங்கை தமிழர் பிரச்சினைக்கு சரியான தீர்வு கண்டு அம்மக்களை நிம்மதியாக வாழ வைத்திருப்பார். அனைத்து அதிகாரங்களும், மத்திய அரசிடம் இருப்பதால்தானே பிரதமருக்கு அவ்வப்போது நினைவுப்படுத்தி கடிதம் எழுத வேண்டி இருக்கிறது.

நீங்கள் எத்தனை முறை பிரதமருக்கு கடிதம் எழுதினாலும், என்ன குரல் கொடுத்தாலும், எங்களை எதுவும் செய்யமுடியாது. எங்கள் நடவடிக்கைகளில் தலையிட எவருக்கும் உரிமை கிடையாது என்று கூறும் இலங்கையின் ஆணவ போக்கிற்கு சரியான முடிவு விரைவில் கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!
பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!**

**நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!**

## பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி....)



- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk


# சிங்களவரை பகைத்துக்கொண்டு நிரந்தர தீர்வைக் காண முடியாது

## தமிழ்க் கூட்டமைப்பை நோக்கி அமைச்சர் திஸ்ஸ விதாரண



(கொழும்பு)

நாட்டில் பெரும்பான்மை இனத்தை பகைத்துக்கொண்டு தமிழ்த் தலைமைகளினால் ஒருபோதும் அரசியல் தீர்வைப் பெற முடியாது.

இந்தியாவையோ அமெரிக்காவையோ அவர்கள் நம்புவதில் அர்த்தம் இல்லை. பெரும்பான்மை மக்களுடன் புரிந்துணர்வுடன் செயற்படுவதன் மூலமே இணக்கமான தீர்வைப் பெற முடியும் என்று அமைச்சரும் முன்னாள் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

எந்தவொரு நாடும் இலங்கையின் உள்ளக அரசியல் விவகாரம் குறித்து அழுத்தம் பிரயோகிக்க முடியாது. ஆனால் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் ஆலோசனைகளை வழங்க முடியும். அதனைத்தான் தென்னாபிரிக்கா செய்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை விவகாரத்தில் எவ்விதமான வெளித் தலையீடுகளும் இருக்கக்கூடாது என்பதில் இந்தியா உறுதியுடன் இருக்கின்றது. அந்த வகையில் இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கும் வெளிநாட்டு சக்திகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்குவது அர்த்தமற்ற செயற்பாடாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் எந்தவொரு வெளிநாட்டுத தலையீடுகளும் இருக்கக் கூடாது என்று இந்தியா தெரிவித்துள்ளமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது.

'இலங்கையின் உள்ளக விவகாரங்களில் எந்தவொரு தலையீடுகளும் இருக்கக்கூடாது என்று இந்தியா உறுதியாக குறிப்பிட்டுள்ளது. அந்தவகையில் இந்தியா உறுதியானதொரு விடயத்தை முன்வைத்துள்ளது என்று கூறலாம்.

குறிப்பாக இலங்கையின் உள்ளக விவகாரங்களில் எந்த நாடும் தலையிட முடியாது. ஆனால் நாங்கள் உதவிகளையோ ஆலோசனைகளையோ கேட்கும் பட்சத்தில் உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கலாம். அதனைத்தான் தென்னாபிரிக்கா செய்து கொண்டிருக்கின்றது. தென்னாபிரிக்கா அனுபவங்களை பகிரவும் ஆலோசனைகளை வழங்கவுமே முன்வந்துள்ளது.

ஆனால் எந்தவொரு நாடும் இலங்கை விவகாரத்தில் தலையிடவோ கைநீட்டவோ முடியாது. இது எப்போதும் பொருத்தமான விடயமாகும். இதனைத் தமிழ்த் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்பட்ட போது அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது. ஆனால் இதன்மூலம் என்ன பயன் கிடைக்கப் போகின்றது என்று தெரியவில்லை.

காரணம் தீர்வைப் பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வெளிநாட்டுச் சக்திகளுடன் செயற்பட்டுக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. அரசியல் தீர்வைப் பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் நாட்டின் பெரும்பான்மை மக்களின் மனதை வெல்ல வேண்டும்.

பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெறாமல் வெளி நாட்டுச் சக்திகளை நம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவையோ அமெரிக்கா வையோ நம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (6)

## சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாய்யைச் சேர்ந்த சுவாமிப்பிள்ளை மரியதாஸ் அண்மையில் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப் பிர மாணம் செய்து கொண்டார்.

இவர் தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வு பெற்ற உதவி முகா மையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)





**சிவஸ்ரீ தியாக சோமாஸ் கந்தராஜக் குருக்கள் அவர்கள்**

கற்கோவளம் கும்பிமணல் முருகன் தேவஸ்தானத்தில் தேவஸ்தானம் சார்பாக

**பனுவளாளன்**

என்னும் பட்டத்தை கலாபூஷணம் தணிகாசலம் அவர்களால் கௌரவிக்கப்பட்டார். அவர் நீண்ட காலம் தேக ஆரோக்கியத்துடன் வாழ்க பல்லாண்டு! பல்லாண்டு!!

**T. செல்வரத்தினம் குடும்பத்தினர்**
**T.S.செல்வரஞ்சன் குடும்பத்தினர்**
**T.S. நிமலன் குடும்பத்தினர்**
**(மங்கள வாத்திய குழுவினர்கள்) நெல்லியடி**


## இன்றைய இராசி பலன்

03.08.2014
(ஆடி 18, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சப்தமி பிற்பகல் 1.49 மணிவரை
சித்திரை காலை 6.45 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
சுந்தரர் குருபூசை

வளவன்

**மேடம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறும், உடல் நலம் சீராகும், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், உற்சாகமான நாள், தேகநலனில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொல்லை தந்தவர்களே உதவ முன்வரலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்:** உறவு- பகை பாராமல் உதவும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் சுமுகமாக முடியும்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணவேண்டிய நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், உங்கள் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வரலாம், பெரியோர் உதவியுண்டு.

**துலாம்:** பயணங்களால் பலன் கிடைக்கும் நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், சயன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பயணங்களால் பிரபலமானவர்களின் தொடர்புகள் ஏற்படலாம், பிதா சிந்தையுண்டு, உணர்ச்சி வசப்படும் சூழ்நிலைகள் உருவாகலாம், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியமான நாள், புகழ்கூடும் நாள்.

**மகரம்:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களால் நன்மையுண்டு.

**கும்பம்:** தடைகள் அகன்று காரியங்கள் எளிதில் கைகூடும், திடீர் பயணங்கள் நன்மை தரும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும்.

**மீனம்:** வரவும் செலவும் சமனாகும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்த ஆயுர்வேத வைத்தியம்

★ இள நரையையும் முடி கொட்டுதலையும் நீக்கி நீண்ட அழகிய கூந்தலைப் பெற எண்ணெயும் உள் மருந்துகளும் உண்டு.

★ பெண்களின் கர்ப்பப்பையில் உள்ள கிருமிகளை நீக்கி, மாத விலக்கை ஒழுங்குபடுத்தி குழந்தை கிடைக்க வழி செய்யப்படும்.

★ ஆண், பெண் பாலியல் பலவீனத்திற்கு அதிசய சக்தி வாய்ந்த இராஜ வஜீகரண லேகியம் பெறலாம்.

★ சங்கீத வித்துவான்களுக்கும் சங்கீதம் கற்கும் மாணவர்களுக்கும் தொண்டையில் ஏற்படும் சிக்கல்களை நிவர்த்தி செய்து சிறந்த சாரீரம் உண்டாக வழி செய்யப்படும்.

★ மூட்டுவாதம் முதல் சகல வாதநோய்களுக்கும் விசேட எண்ணெய் கிடைக்கும்.

★ சளி சம்பந்தமான நோய்கள் மற்றும் நீண்டகால நோய்கள் எல்லாவற்றிற்கும் சிறப்பான சிகிச்சை அளிக்கப்படும்.

★ உடம்பில் உள்ள தேவையற்ற கொழுப்பையும் துன்னீரையும் அகற்ற அரிய மருந்துகள் உண்டு.

குறிப்பு:

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் சாந்தி மெடி கிளிக், 462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சந்திக்கலாம்

விபரங்களுக்கு:- Dr. த.கிருஷ்ணபகவான் Govt Regd No. 10329 கிருஷ்ணா சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, பருத்தித்துறை றோட், நீர்வேலிச்சந்தி, நீர்வேலி. தொ.பே.இ. 0779723369.

(7199)



## British College of Languages

பிரித்தானிய ஆங்கிலக் கல்லூரி

**IELTS** [Highest pass rate in Jaffna]

**General English**

**Spoken English**

**I-ESOL**

**Business English (with presentation skills)**

IELTS Registration Centre | City & Guilds APPROVED CENTRE | British College Smart teachers ,bright tomorrow | 0777302882

படிமுறை ரீதியில் அமைந்த கற்கை நெறிகள்,மாணவரின் நிலைக்கேற்ற கல்வி நெறியை தெரிவு செய்ய வசதி செய்கிறது. 16 வருட அனுபவமுள்ள முழு நேர இங்கிலாந்து பட்டதாரி ஆசிரியர்கள் கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம். எமது மாணவர்களின் வெற்றிக்கதைகளை இணையத்தில் காணுங்கள் : http://edu.kugroup.info/

**BCL@Knowledge Universe**

No 626,1/1,K.K.S Road, Jaffna.021-3208342

(7176)


## ஏலம் கூறல்

*(யாழ்ப்பாணம்)*

நடைபெற்றுக் கொண்டிருக்கும் நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு சுண்டல் வியாபார வண்டிகளுக்கான ஏலம் கூறல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாநகர சபையில் இடம்பெறுமென மாநகர சபை ஆணையாளர் செ. பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

(6)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532



## காணி விற்பனைக்கு

கரணவாய் ஆவணப்புலம் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
077 9263660 (7198)
077 6636277



## விற்பனைக்கு

சிறிது காலம் பாவித்த நல்ல நிலையில் உள்ள ஐஸ்கிறீம் மெசின் (Win Rich Company) உடன் விற்பனைக்குண்டு. (7189)

தொடர்பு:- 077 9789114



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
கி.பா: 44 ¾ செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc / அரசாங்க பதவிநிலை உத்தியோகத்தர்
தொ.இ: B/3443

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2
கி.பா: 18
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L / Electrician (கனடா – சிற்றிசன்)
தொ.இ: B/3447

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 38 சூரி செவ் 5 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: HNDA / தொழில்நுட்ப உத்தியோகத்தர்
தொ.இ: B/3448

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 14
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: MSc / ஆசிரியர்
தொ.இ: B/3449

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1
கி.பா: 43 செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: GAQ
தொ.இ: G/3488

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா: 86 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்
தொ.இ: G/3489

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா: 18 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA / புதிய குடிவரவாளர்களுக்கான ஆலோசகர் (கனடா – சிற்றிசன்)
தொ.இ: G/3491

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: 47 ½ செவ் 7 இல்
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/3494

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## பொது மக்களுக்கான அறிவித்தல்

### பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

(31.07.2014 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
11. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
12. சம்பத் பாங்க் பிஎல்சி
13. சிற்றி பாங்க் என்ஏ
14. செலான் பாங்க் பிஎல்சி
15. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
16. டொயிச் பாங்க் ஏஜி
17. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
19. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
20. பப்ளிக் பாங்க் பெர்காட்
21. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
22. மக்கள் வங்கி
23. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
24. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
25. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
14. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23. சிற்றிசன்ஸ் டிவலொப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ரான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நேஷின் லங்கா பினான்ஸ் பிஎல்சி
33. ப்ரெக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதே வேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் சில தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒருங்கிணைப்பு செயற்பாட்டின் கீழ் இணைக்கப்பட/கையகப்படுத்தப்பட/உட்கொள்ளப்பட இருக்கின்றன. இது குறித்து பொதுமக்களுக்கு அறியத் தருவது என்னவென்றால் இந்த ஒருங்கிணைப்பு செயற்பாடானது மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுடனான உங்களது தற்போதைய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வைப்புக்களை எந்தவகையிலும் பாதிக்காது என்பதாகும்.

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

(G-8094)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் சிரமதான நிகழ்வு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது ஆளுநர் மற்றும் சிரமதானப் பணியில் ஈடுபட்ட ஆளுநர் அலுவலகப் பணியாளர்களை படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

# குடியிருப்புக்கு அனுமதி தருமாறு இடது கரை மக்கள் கோரிக்கை

28 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து வருகிறோம்.எமது குடியிருப்புகளுக்கு அனுமதி தாருங்கள் என முத்தையன் கட்டு இடது கரை வாழ் தமிழர்கள் கோரிக்கை விடுத்த வண ணம் உள்ளனர.

1986ஆம் ஆண்டுக்குமுன்னர் காடுகளாய் கிடந்த காணிகளை வெட்டி அங்கு குடியேறி வாழ்ந்து வரும் தமக்கு இன்று வரை காணி அனுமதி பத்திரம் வழுங்கப்பட வில்லை என வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனிடம் முறையிடடுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த வாரம் முத்தையன்கட்டு இடதுகரை பகுதியில் 18 ஏக்கர் திட்டத்தில் வாழும் மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் இன்னும வழங்கூப்படாதது தொடர்பிலான வாய்மொழி, எழுத்துமூல முறைப்பாடுகள் ரவிகரனிடம் முன் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் முத்தையன்கட்டு இடதுகரை பகுதியில் மக்கள் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்த ரவிகரன் இது தொடர்பிலான மக்களின் முறைப்பாடுகளை கேட்டிருந்தார்.

1986ஆம் ஆண்டுக்கு முன் காடு களாய் இருந்த காணிகளை வெட்டி துப்புரவா்க்கி அங்கு சுமார் 28 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து வரும் நிலையில் இன்னும் தமக்கு காணி அனுமதிப் பத்திரம் கிடைக்கவில்லை என தெரிவித்திருந்தனர்.

மேலும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவைகள் முறையிட்டும் பலன் கிடைக்கவில்லை எனவும் இக் காணி அனுமதிப்பத்திரம் கிடைக்காததால் அதனை காரணம் காட்டி தற்காலிக வீடு (6 மாத கால உத்தர வாதம்) தவிர்ந்த வேறு எதுவித உதவிகளும் கிடைக்கவில்லை எனவும் ரவிகரனிடம் முறையிட்டு இருந்தனர்.

யுத்தகாலப்பகுதியில் தம்முடன் இருந்தவைகள் அனைத்தையும் இழந்து திரும்பவும் வந்து குடியேறிய போதும் ஒவ்வொரு குடும்பத்திலும் 3, 4, 5, 6 என குடும்ப அங்கத்தவர்கள் இருந்தும் காணி அனுமதிப்பத்திரம் இல்லாததால் வீட்டுத் திட்டம் தரப்படவில்லை என வும் மேலும் முறையிட்டிருந்தனர். (6)

# ஐ.நா.சபையில் மோடியின் உரை!

பிரதமர் நரேந்திர மோடி வரும் செப்டெம்பர் 27ஆம் திகதி ஐ. நா. பொதுச் சபையில் உரையாற்ற உள்ளார். ஆண்டு தோறும் நடைபெறும் ஐநா பொதுச் சபை கூட்டத்தில் சர்வதேச தலைவர்கள் உரை நிகழ்த்துவது வழக்கம்.

ஐ.நா. பொதுச் சபையின் 69ஆவது கூட்டம் வரும் செப்டெம்பர் 24 முதல் ஒக்டோபர் முதலாம் திகதி வரை நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் உரையாற்ற இருக்கும் தலைவர்களின் பட்டியலை ஐ.நா. வெளியிட்டுள்ளது. இதில் பிரதமர் மோடியின் பெயரும் இடம்பெற்றுள்ளது.


இதன் படி 200 சர்வதேச தலைவர்கள் மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் முன்னிலையில் பிரதமர் உரையாற்றுகிறார். சர்வதேச அளவிலான பிரச்னைகள் குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படும். (6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 50 | 60 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 300 | 400 |
| தக்காளி | 100 | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 50 |
| கோவா | 100 | 100 | 100 | 100 |
| கரட் | 160 | 120 | 140 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 140 | 100 | 70 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 80 | 100 |
| பயற்றங்காய் | 60 | 100 | 80 | 50 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 80 |
| கறிமிளகாய் | 150 | 250 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 20 | 60 | 40 | 40 |
| போஞ்சி | 140 | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 40 | 50 | 40 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 35 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 94


துஷி துஷி





விபூசன்



டோறின் மன்மதநாயகம்




ராகுலன் பாலா



மதீசன் கணேஷ்

ஒரு கணவனுக்கு அவன் மனைவி வளர்த்த பூனையைக் கண்டாலே ஆகாது. அதை எப்படியாவது விரட்டிவிட வேண்டும் என்று நினைத்தான்.

ஒரு நாள் அப்பூனையைத் தூக்கி கொண்டு இருபது வீடுகள் தள்ளி எறிந்து விட்டு வந்தான். வீட்டிற்கு வந்தால் பூனை வாசலில் நின்று கொண்டிருக்கிறது.

அடுத்த நாள் அப்பூனையை அடுத்த தெருவில் விட்டிட்டு வந்தான்.அன்றும் பூனை அவனுக்கு முன்னால் வந்து மாடியில் இருந்து அவனைப் பார்த்துக் கொண்டிருந்தது.

வெறுப்படைந்த அவன் அடுத்த நாள் பூனையைக் காரில் ஏற்றிக் கொண்டு வலது புறம்,இடது புறம் என்று மாறி மாறி நீண்ட தூரம் சென்று பூனையை விட்டிட்டு வந்தான். சிறிது நேரம் கழித்து கணவனிடமிருந்து மனைவிக்கு போன் வந்தது.

கணவன் கேட்டான், "உன் பூனை வீட்டிற்கு வந்து விட்டதா?" ஆம் என்று மனைவி சொல்ல கணவன் சொன்னான், "போனை பூனையிடம் கொடு. எனக்கு வீட்டிற்கு வர வழி தெரியவில்லை"

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பங்கெடுக்கும் பட்சத்தில் முன்னேற்றம் ஏற்படும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அமைச்சரவையில் வடக்கு மாகாண முதலமைச்சர் பங்கெடுக்கும் பட்சத்தில் மாகாணத்தின் அபிவிருத்தி மேலும் முன்னேற்றம் காணும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று முன்தினம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் நிலவிய யுத்த சூழலால் எமது பகுதிகளிலுள்ள வீதிகளும் பெரும் சேதங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளாகியிருந்தன.

யுத்தம் நிறைவுக்கு வந்த நிலையில் யாழ்.மாவட்டம் உள்ளிட்ட வடக்கின் பிரதான வீதிகள் காப்பெற் இடப்பட்டு சிறப்பான முறையில் அரசினால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எதிர்காலத்தில் தொடரப்படவுள்ள ஏனைய வீதிகளின் புனரமைப்பு பணிகள் சிறப்பான முறையிலும் ஸ்திரத் தன்மையுடனும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதனிடையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சரவையில் பங்குபற்றுமாறு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும் அதனை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன்நிராகரித்திருந்ததையும் சுட்டிக் காட்டிய துடன் அவ்வாறு முதல மைச்சர் அமைச்சரவையில் பங்கெடுக்கும் பட்சத்தில் இப்பகுதியின் அபிவிருத்திகளை மேலும் அரசு டன் இணைந்து முன்னெடுக்க முடியுமென்றும் தெரிவித்தார். (6)

# நாட்டில் கடும் வரட்சி; 1,50,000 பேர் பாதிப்பு

(கொழும்பு)

11 மாவட்டங்களில் நிலவுகின்ற வரட்சி காரணமாக ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிடுகின்றார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கத்தினால் சுமார் 1,900 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

வரட்சி நிவாரணங்கள், குடிநீர் மற்றும் நீர்தாங்கிகளை விநியோகித்தல், குளங்களை புனரமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக இந்த நிதி பயன்படுத்தப்படுவதாக அமைச்சர் மஹிந்த அமர வீர சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் 16 வீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் கீழ் குடிநீரை விநியோகிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதுடன், செய்கைகள் பாதிக்கப்படாதவாறு நீரை முகாமைத்துவம் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் ஜானகி மீகஸ்தென்ன குறிப்பிடுகின்றார். (6)

# குடும்பஸ்தரைக் காணவில்லை

யாழ். அல்வாய் கிழக்கினைச் சேர்ந்த இராசசிங்கம் கபில்நாத் (வயது 34) என்ற குடும்பஸ்தரைக் காணவில்லையென, அவரது மனைவி பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியாக கடமையாற்றும் மேற்படி நபர் கடந்த ஜூலை மாதம் 20 ஆம் திகதி வீட்டிலிருந்து சென்றதாகவும், அதன் பின்னர் இரண்டு நாட்கள் கழித்து கிளிநொச்சியில் இருந்து தொலைபேசியில் உரையாடியதாகவும் மனைவி தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தனது கணவன் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையில் இத்தனை நாட்களாக முறைப்பாடு செய்யவில்லையெனவும் மனைவி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.கிளையிலும் கடந்த வியாழக்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக மனைவி தெரிவித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக பருத்தித்துறைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6)


# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி கந்தசாமி தங்கம்மா


கொடிகாமம் அல்லாரையைப் பிறப்பிடமாகவும் புலோப்பளை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தங்கம்மா கடந்த 31 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அல்லிப்பளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### கணபதி தங்கவடிவேல்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கம்பர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி தங்கவடிவேல் (ஓய்வு பெற்ற ஆசிரியர்- உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்) கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று ஊரிக்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### ஆசைப்பிள்ளை சிற்றம்பலம்

சுழிபுரம் கிழக்கு பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை சிற்றம்பலம் கடந்த 28 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சுழிபுரம் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி கந்தையா கமலம்



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கமலம் கடந்த 31 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வெல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### காசிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட காசிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்(ஓய்வு பெற்ற உள்ளூராட்சி திணைக்கள எழுதுவினைஞர்) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாவிட்டபுரம் தச்சன்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சுப்பிரமணியம் தியாகராஜா



நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தியாகராஜா கடந்த மாதம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.




### திருமதி இரத்தினம் செல்வம்

யாழ்.குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் செல்வம் கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### கந்தையா தியாகராஜா



காரைநகர் முல்லைப்பிலவைப் பிறப்பிடமாகவும் இல.06,6 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தியாகராஜா(ஓய்வு பெற்ற தபாலதிபர்) கடந்த 31 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சாம்பலோடைஇந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி குணநாயகம் பரமேஸ்வரி

கொக்குவில் பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட குணநாயகம் பரமேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்று பின்னர் பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி தங்கராஜா மரியம்மா



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா மரியம்மா கடந்த 31 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு Scott Funeral Home-Woodbridge,7776 Kipling Ave,Woodbridge,ON L4L 1Z2 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 வயது சிறுமி துஷ்பிரயோகம்

## இளைஞன் கைது

(கரணவாய்)

நாகர்கோயில் பகுதியில் சிறுமி ஒருவர் இளைஞர் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 26ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.


நாகர்கோயில் தெற்குப் பகுதியைச் சேர்ந்த குறித்த 15 வயதுச் சிறுமியை அப்பகுதியைச் சேர்ந்த 28 வயது இளைஞர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

குறித்த சிறுமியை தான் திருமணம் செய்வதாகக் கூறியே பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார். இந்நிலையில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை அடுத்து சிறுமி அளவுக்கதிகமாக மாத்திரைகளை உட்கொண்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறுமி மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியும் பெற்றோரும் பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்த இளைஞன் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞரை சிறுவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-60)



நன்றி மிரர்.

# உயிரைக்காத்துக் கொள்ளவே தமிழ் இளைஞர்கள் படகில் செல்கின்றனர்

## கல்வி அமைச்சர் கவலை

(மானிப்பாய்)

உயிரைக் காத்துக் கொள்ளவே இளைஞர்கள் கடல் கடந்து செல்வதாகவும் ஒரு நாட்டில் இருக்கும் இளைஞர்கள்தான் அந்தநாட்டில் இருக்கும் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்வார்கள் என வடமாகாணக் கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தினால் கடந்த ஆண்டிற்கான மாவட்ட விருது வழங்கல் விழா யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

உலக சரித்திரத்திலே புதிய நாடுகள் உருவாக்கம்பெறும்பொழுது, அந்த நாடுகளின் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும், உழைத்தவர்களிலே பெரும்பாலானவர்கள் தங்களுடைய இளம் இரத்தத்தை, இளம் துடிப்பை அந்த வீரத்தை தங்களுடைய இளமை நாட்களிலே தமது நாட்டுக்காக அரப்பணித்தவர்களே.

அவ்வாறானவர்கள் தான் எமது வடபுலத்திலும் தங்களுடைய வீரத்தை எங்களுக்கு காண்பித்திருக்கிறார்கள்.

அண்மைக் காலங்களிலே எமது பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் போது, தமது இளம் மூச்சை நிலைநாட்டி, இறுதியிலே மூச்சை விட்டவர்களையும் நாம் இவ்விடத்தில் நினைவுகூர வேண்டும. எமது நாட்டில் நடைபெறுகின்ற பல துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் கண்முன்னே ஓடுகின்றன.

அதற்கு இளைஞர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய முடியாமல் இங்கு போவதா அங்கு போவதா என்று தெரியாமல், யாரிடம் போனால் தஞ்சம் கிடைக்கும் என்று தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக கடல்கடந்தும் செல்கின்றார்கள்.

தமது எதிர்காலம் என்னவாக மாறும், தமக்கு வேலைவாய்ப்பு இருக்கின்றதா என்று அங்கலாய்க்கின்ற நேரத்திலே பல சோதனைகளுக்குள் இளைஞர்கள் மூழ்கி செல்வதை அறியக்கூடியதாகவுள்ளது.

அதற்கான பின் அடித்தள வேலைகள் மாகாணத்திலே இன்னும் சரியாக முன்னெடுக்கப்படவில்லை. இளைஞர்களுக்கு சுபீட்சமான எதிர்கால வாழ்வை அளிக்கக் கூடிய செயற்திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும்.

அந்தத்திட்டங்களை நாங்கள் செய்கின்ற பொழுது, எமக்கு முட்டுக்கட்டையாக பல சோதனைகளை எங்கள் மத்தியிலே போடுகிறார்கள்.

குறிப்பாக நூற்றுக்கணக்கான யுவதிகளை முன்பள்ளி ஆசிரியர்களாக சேர்த்து இராணுவத்தினருடைய கொடுப்பனவுகளை கை நிறைய வழங்கி அவர்களை திசை திருப்பியுள்ளார்கள்.

அவ்வாறு பணிக்குச் செல்பவர்கள், தாங்கள் என்ன செய்கின்றார்கள்? யாருக்காகப் பணி செய்கின்றோம்? எதற்காக பணி செய்கின்றோம்? எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பதை அந்த யுவதிகளும் சிந்தித்துக்கொள்ள வேண்டும்.

வடபுலத்தில் இருக்கின்ற இளைஞர்களுக்கு நாங்கள் ஒரு மகாநாட்டை நடத்திக்கொள்ள வேண்டும. அதன் மூலமாக இந்த இளைஞர்கள் ஒன்றாக சேர்ந்து பல பிரகடனங்களை செய்து கொள்ளலாம்.

அதற்கூடாக எங்களுடைய நாட்டிலே நாங்கள் தமிழர்கள் என்பதையும், தமிழர்களுடைய சக்தி எவ்வாறாக இருக்கிறது என்பதையும் இந்த உலகம் பூராகவும் காண்பிக்கலாம்.

ஆகவே, நிச்சயமாக ஒரு மகாநாடு ஒன்றை நடத்துவதற்குரிய சகல அம்சங்களையும் அடங்கிய கருப்பொருளை முன்னெடுத்து அதற்குரிய நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால், 2013 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிகளில், யாழ்.மாவட்டம் சார்பாக முதலாம் இடத்தை பெற்ற 13 பேருக்கு விருதுகளும், விளையாட்டுக்களுக்கான பயிற்சிகளில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மேலும், வடமாகாணத்தைச் சேர்ந்த 5 மாவட்டங்களையும் சேர்ந்த இளைஞர் கழக சம்மேளனங்களிற்கு மடிக்கணனிகளும் வழங்கப்பட்டன. (6-23)

## நிர்வாகிகள் தெரிவு

கோண்டாவில் மத்தி மேற்கு(ஜே/117) கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாக உத்தியோகத்தர் தெரிவும் அண்மையில் (ஜே/117) கிராம அலுவலர் காரியாலயத்தில் நல்லூர் பிரதேச கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர் திருமதி மாலினி பாஸ்கரன் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது தலைவராக சு.பரஞ்சோதியும் செயலாளராக நநஜீவனும் பொருளாளராக ஞா.மகிந்தனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (6)

## கௌரவிப்பு விழா

தேசிய மட்ட வீரர்கள் கௌரவிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை சேவா நிலையத்தில் முற்பகல் 10 மணிக்கு கழுகுகள் விளையாட்டுக் கழக தலைவர் க.சதீஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது. (6-37)

# யாழ்ப்பாண நினைவுகள் இன்று அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

வேதநாயகம் தபேந்திரன் எழுதிய யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 01 நூல் அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலைய முத்தமிழ் மன்றத்தின் அனுசரணையில் குப்பிளான் ஐ.சண்முகன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை இளங்கோ சனசமூக நிலைய தலைவர் மா.மெய்யழகனும் வாழ்த்துரைகளை யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகமும் வெளியீட்டுரையினை தொண்டைமானாறு வீரகத்தி மகாவித்தியாலய ஆசிரியர் சு.குணேஸ்வரனும் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும் ஏற்புரையை நூலாசிரியர் வேதநாயகம் தபேந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (6-23-254)




மீசாலைச் சந்தியில் கடந்த வியாழக்கிழமை வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹன்ரர் வாகனத்தை யாழில் இருந்து சென்ற மற்றொரு ஹன்ரர் வாகனம் மோதியதில் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹன்ரர் வீட்டு மதிலை உடைத்துக் கொண்டு பாய்ந்ததை படத்தில் காணலாம். (படம்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# நிர்வாகத் தெரிவு இடம்பெறவில்லை கடற்றொழிலாளர்கள் கடும் விசனம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக கட்டமைப்புக்கள் இதுவரையிலும் சீர் செய்யப்படவில்லை என கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கூட்டுறவு சட்டத்தின் பிரகாரம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை அதன் நிர்வாக கட்டமைப்பை புதிதாக தெரிவு செய்ய வேண்டும்.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் சமாசத்தின் எல்லைக்குட்பட்ட மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான பிரதேசத்தில் சுமார் 15 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் காணப்படுகின்றன.

இவற்றுள் இரண்டு வருட கால எல்லை முடிவடைந்தும் இன்னும் சில சங்கங்கள் சீர் செய்யப்படாது காணப்படுகிறது.

குறிப்பாக வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இரண்டு வருட கால எல்லை முடிவடைந்தும் இதுவரையிலும் இன்னும் அதன் நிர்வாக கட்டமைப்புக்கள் புதுப்பிக்கப்படவில்லை என கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் நான்கு தடவைகள் காரியாலய விளம்பரப் பலகையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்தும் 4 தடவைகளும் அச்சங்கத்தின் அங்கத்தவர்கள் ஒன்றுகூடிய வேளையிலும் எவ்விதமான முன்னறிவித்தலும் இன்றி நிர்வாகத் தெரிவுகள் இரத்துச் செய்யப்பட்டது.

இதற்கமைய நேற்று முன்தினம் இச்சங்கத்திற்குரிய நிர்வாகத் தெரிவு அறிவிக்கப்பட்டும் நிர்வாகத் தெரிவு எதுவும் இடம்பெறவில்லையென கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே நிர்வாகத் தெரிவு இடம் பெறாத அனைத்து கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான நிர்வாகத் தெரிவை மிக வேகமாக மேற்கொண்டு சங்கங்களின் வளர்ச்சியிலும் சங்கங்கள் மக்களுக்கு வழங்கவேண்டிய சேவையினையும் சிறப்பாக மேற்கொள்வதற்கு கூட்டுறவு துறையோடு தொடர்புடைய அதிகாரிகள் உரிய கவனம் செலுத்த வேண்டுமென கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (6-64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பல்கலைக்கழக மாணவர்களின் தற்கொலைக்கு காரணம் என்ன?




க.தங்கலீலா, கரவெட்டி

Hai Sir!

**பல்கலைக்கழக மாணவர்களின் தற்கொலைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதற்கு காரணம் என்ன?**

தற்கொலைக்கு பின்னர் கூலிவேலை செய்து தன்னைப் படிக்க வைத்த தந்தை படும் பாட்டையும் தன் மகன பல்கலையில் படிக்கிறான் அவனின் பட்டமளிப்பை பார்த்து விட வேண்டும் என ஆசை வளர்த்த ஏழைத்தாயின் ஏக்கத்தையும் அறியாதவன் செய்யும் கோழைத்தனம்தான்.

P. பிரபகி, பருத்தித்துறை

Hai Singam!

**20 வயசுக்கு பின்வந்தால்தான் அது LOVE. அதற்கு முன்வந்தால் அது LOVE இல்லை Affection என்கின்றார்களே அது உண்மையா?**

காதல், அன்பு என்பதற்கப்பால் ஒரு ஆண் அல்லது பெண் உடல், உள ரீதியாக பக்குவம் அடைவது Teenage இற்கு பின்தான். Teenage வயதில் வருவதை Affection என கூறுவதில் தவறில்லையே!

வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி.

அன்பின் வியாசரே!

**மூன்றுவேளை உணவு இலவசமாக எங்கே கிடைக்கும்?**

இந்தியாவில் ஒரு சாதாரண தெருவோரக்கடை ஒன்றில் ஐந்து இட்லி, சாம்பார் பத்துரூபா. முதியவர்களுக்கு என்றால் பாதி விலை. மனநோயாளர்களுக்கென்றால் இலவசம். இப்படி நம்மூரில் இருக்குமென்றால் நம் அனைவருக்கும் இலவசம்தான்.

என்.சுரேஷ், யாழ்ப்பாணம்.

அன்பின் வியாசரே!

**கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இனியபாரதி கேற்கின்றார், இரா.சம்பந்தன் ரணிலுடன் இணையலாம் என்றால் ஏன் அரசுடன் இணையக் கூடாது என்று.**

காட்டில் சிங்கராஜாவுக்கு எதிராக எல்லா மிருகங்களும் பேரணி செய்கின்றன. யாருக்கும் தெரியாமல் சிங்கராஜாவுடன் கூட்டணி வைத்திருக்கும் நரியும் பேரணியில் பங்கு கொள்கிறது. பேரணியை திசை திருப்பி சிங்கராஜாவின் குகைக்குள்ளேயே காட்டு மிருகங்களை மாட்டி விடுகின்றது குள்ள நரி. புரிந்து கொண்டால் ச(ந)ரி.

த.மோகனரூபன், சுழிபுரம்

வியா அண்ணா!

**நிறைய அடி விழுந்தா அது வாழ்க்கை. நிறைய முடி விழுந்தா அது வழுக்கை. இதைப்பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?**

மொட்டந் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சுப் போடுவது போல் உள்ளது.

கணபதிதாசன், கட்டைக்காடு

அன்பின் வியாசரே!

**அன்று முந்நூறு நாட்கள் ஓடியது திரைப் படங்கள். ஆனால் இன்று அவ்வாறு இல்லையே, காரணம் என்ன?**

அன்று கதைக்காக கதாநாயகர்கள் தேடப்பட்டார்கள். இன்று கதாநாயகர்களுக்காக கதை தேடப்படுகின்றது.

கிரு.செந்தூரன், நிதர்சன் கிறீம் கவுஸ்

அன்பின் வியாசரே!

**அண்மைக்காலத்தில் உம் மனதை உலுக்கும் சம்பவம் ஏதாவது நடந்ததுண்டா...?**


இஸ்ரேலின் கோரத் தாண்டவத்தில் ஹாசாவில் குழந்தைகள் கொத்துக் கொத்தாய் பலி எடுக்கப்படுகிறார்களே. அவர்களின் கண்ணீர் யாருக்கும் தெரியவில்லையே. ஈழத் தமிழர் நிலைதான் அவர்களுக்கும். உயிர்ப்பலி கொடுத்தவர்களுக்குத்தான் அதன் வலி தெரியுமே தவிர எடுத்தவர்களுக்கு தெரியாது.

இ.கரன், சுழிபுரம் மத்தி.

Hi வியாசகர் Bro

**குறை கூறுபவன் பற்றி?**

தன்னைப் பற்றிய குறைகளை மறைக்க முற்படுபவன்.



# இளைஞன் கொலை

(கொழும்பு)

பொறளை வணாத்தமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் மூவர் அடங்கிய குழுவினரால் இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

23 வயதான நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. (6)

# போராட்டத்தின் பின்னணியில் புலம்பெயர் புலிகள் உள்ளனர்

## ஊடகவியலாளர்கள் மீது குற்றச்சாட்டு

(கொழும்)

ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் வழமை போலவே புலம்பெயர் புலிகளே இருப்பதாக அரசு ஆதரவு ஊடகங்கள் கண்டு பிடித்துள்ளன.

இதேவேளை, தமிழ் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் அரசாங்கம் தொடர்ந்து அவதானித்துக் கொண்டு வருகிறது.

அவர்களினால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நாங்கள் உணர்கிறோம். இந்த விடயத்தில் அவர்களை நாங்கள் எச்சரிக்கிறோம் என் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல. பத்திரிகையாளர் சந்திப்பின் போது எச்சரித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு ஊடக செயலமர்விற்கு சென்ற 7 ஊடகவியலாளர்களின் வாகனத்திற்குள் இராணுவம் கஞ்சாப்பொதியை போட்ட விடயம் தொடர்பில் ஊடகவிய்லாளர்கள் கேள்வியெழுப்பிய போதே இதனை தெரிவித்தார்.

தமிழ் ஊடகவியலாளர்கள் குறித்து பேசும்போது, அமைச்சர் கடும் கோபமடைந்து ஆவேசப்பட்டு பேசினார். அவர்கள் நாட்டிற்கு அச்சுறுத்தலாக உள்ளனர் என்றும் பரபரப்பாக குற்றம் சுமத்தினார்.

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் தேசத்துரோக போக்கில் செயற்படுகின்றன. அதற்கு இந்த ஊடகவியலாளர்களும் துணை போகின்றார்கள்.

இவர்களினால் இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றார்.

தேசிய பாதுகாப்பிற்கு எதிராக தமிழ் ஊடகவியலாளர்கள் செயற்படுகின்றார்கள் என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். (6)

# சாட்சியம் சடலமாக மீட்பு

(கொழும்பு)

நவகத்தேகம தேசிய பாடசாலையின் ஆசிரியையை முழந்தாளிட வைத்தமை தொடர்பான வழக்கில் நான்காவது சாட்சியாக சாட்சியமளித்தவரின் சடலம், பாடசாலைக்கு முன்னாலிருந்து மீட்கப்பட்டது.

புஞ்யசேன பண்டார என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது மரணம் தொடர்பில் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நவகத்தேகம தேசிய பாடசாலையில் ஒழுக்கத்திற்கு பொறுப்பான ஆசிரியர் துசிதா ஹேரத் என்ற ஆசிரியையை முழந்தாளிட வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வடமேல் மாகாண சபையின ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத் குமாரவிற்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 21 ஆவது தேசிய மாநாடு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

881

## இளவரசியின் தோழி செய்த வஞ்சனை

விமலன் என்னும் அரசன் கோசல நாட்டை ஆட்சி புரிந்தான்.

அவனுடைய புதல்வன் இளவரசன் கமலாகரன் அழகிலும் வீரத்திலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினான்.

ஒருநாள் மனோரதசித்தி என்னும் தவசி, அரண்மனைக்கு வந்திருந்தார். அவரை வணங்கி உபசரித்தான் இளவரசன்.

வண்டுகள் தாமரை மலரில் அல்லாது வேறு எதில் திருப்தி அடையும்? என்ற ஒருவரியை இளவரசன் காதுக்கு எட்டும்படி பாடிக்கொண்டிருந்தார் தவசி.

திரும்பத் திரும்ப அந்தப் பல்லவியையே தவசி பாடிக்கொண்டிருப்பதைக் கவனித்த இளவரசன் கமலாகரன், தவசியை தனிமையில் அழைத்து நீங்கள் ஒரு வரியையே திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருப்பதன் நோக்கம் என்ன? என்று கேட்டான்.

தவசி புன்னகையுடன் இளவரசனைப் பார்த்தார்.

மறுபடியும் அந்தப் பல்லவியைப் பாடினார்.

இளவரசே! இந்தப் பல்லவி, உன் கவனத்தைக் கவர்வதற்காகவே பாடுகிறேன்.

நான் நாடுதோறும் சுற்றி வருகிறவன். அப்படிச் சுற்றி வரும்போது, விதிசா என்னும் நாட்டுக்குச் சென்றேன்.

அங்கே இளவரசி அம்சவல்லியைக் காண நேர்ந்தது.

அம்சவல்லி மிகவும் அழகு வாய்ந்தவள்.

அவளைப் போன்ற அழகியை வேறு எங்குமே காணவில்லை.

அத்தகைய அழகு மிகுந்த அரசகுமாரிக்குத் தகுந்த அரசகுமாரன் யார் என்று சிந்தனை செய்தேன்.

உடனே அவளுக்கு ஏற்ற கணவன் நீயே என்று என் உள்ளத்தில் தோன்றியது.

அதை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் செயலில் ஈடுபட்டேன்.

அம்சவல்லியின் தந்தையான விதிசா நாட்டு அரசன் உலாவும் இடத்தில் என்னை மிஞ்சிய ஓவியன் இந்த நாட்டில் எவனாவது இருக்கின்றானா? என்று எழுதி வைத்தேன்.

மன்னன் அதைப் பார்த்ததும் என்னை அழைத்து ஒரு படம் வரையச் சொல்லி உத்தரவிட்டான்.

உன் நினைவு என் உள்ளத்தில் பதிந்திருந்ததால், உன் உருவத்தை அப்படியே அரண்மனை மண்டபச் சுவரில் வரைந்தேன்.

அதைப் பார்த்த அரசன் ரசித்த என்னைப் பாராட்டினான்.


அந்தப் படத்தை அரசகுமாரி பார்க்க வேண்டுமே என்பது என் ஆவல்.

அதற்காக், ஒரு வாலிபனை என் வசப்படுத்திக்கொண்டு அவன் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்பதை ரகசியமாகச் சொல்லிக் கொடுத்தேன்.

அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றேன்.

அவன் ஆடிப்பாடி பித்துக்குளி போல் பேசி, அரச குமாரியின் கவனத்தைக் கவர்ந்தான்.

அரசகுமாரி அவனை வேடிக்கை பார்த்தபடி, தன் அறையைவிட்டு வெளியே வந்தாள்.



அந்த வாலிபன், நான் வரைந்த, படத்துக்கு முன்னே நின்றுகொண்டு இந்த அழகனுக்கு ஏற்ற பெண் இந்த உலகில் யார்? என்று பாடிக் கூத்தாடினான்.

அந்த இடத்தில் நானும் நின்றுகொண்டிருந்தேன்.

அரசகுமாரி என்னிடம் நெருங்கி நீங்கள் யாருடைய படத்தை வரைந்தீர்கள்? இந்தப் பித்துக்குளி, அதைப் பார்த்து என்ன கூறுகிறான்? என்று கேட்டாள்.

இந்தச் சந்தர்ப்பத்தைத்தானே நானும் எதிர்பார்த் திருந்தேன்.

இளவரசே! உன்னைப் பற்றிய வீர தீரப் பிரதாபங்களை இளவரசியிடம் வர்ணிக்கத் தொடங்கினேன்.

அதைக்கேட்கக் கேட்க, அவள் உள்ளம் கனிந்து உன்னிடம் காதல் அரும்பியது.

இதற்கிடையில் அரசன் வந்து என்னையும் பித்துக் குளிபோல நடித்த வாலிபனையும் வெளியேற்றிவிட்டான்.

அம்சவல்லி உன்மீது கொண்ட காதலால் உடல் மெலியலானாள்.

அவளைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியபோது எனக்குப் பொருளும் உடைகளும் வழங்கி உபசரித்தாள்.

மேலும் ஓர் உடையில் வண்டுகள் தாமரை மலரில் அல்லது வேறு எதில் திருப்தி அடையும் என்று எழுதி எனக்குப் பரிசு அளித்தாள். அவள் உன்னை நினைத்து ஏங்குவதையே பிரதிபலிக்கிறது அது! இதோ பார்! அரசகுமாரி கைப்பட எழுதிய உடையை? என்று கூறி அதை இளவரசனுக்குக் காண்பித்தார் தவசி.

இளவரசன் கமலாகரன் மனம் இளவரசி அம்சவல்லியைச் சுற்றி வட்டமிட்டது.

அவளை எவ்வாறு அடைவது என்பதே அவனுடைய சிந்தனையாக இருந்தது.

அந்தச் சமயத்தில் அங்கதேச அரசன் கோசல நாட்டின்மீது படையெடுத்து வந்தான்.

கமலாகரன், தன் தந்தையின் கட்டளைப்படி வீராவேசத்துடன் போர் முனைக்குச் சென்று அங்கதேச அரசனை வென்று வெற்றிக்கொடி நாட்டினான். அதன்பின் மேலும் பல நாடுகளை வெற்றிகொள்ள ஆவல்கொண்டு புறப்படுவதற்காகத் தன் தந்தைக்குச் செய்தி அனுப்பிவிட்டு அடுத்துப் பல நாடுகளைப் பிடித்து வெற்றி முரசு கொட்டிச்சென்றான். (தொடரும்)

## 08.2014 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 435 - கொன்ஸ்டண்டீனபோலின் ஆயர் நெஸ்டோரியஸ் (நெஸ்டோரியனிசத்தை ஆரம்பித்தவர்) பைசண்டைன் பேரரசன் இரண்டாம் தியோடோசியசினால் எகிப்துக்கு நாடு கடத்தப்பட்டார்.
- 1492 - கொலம்பஸ் ஸ்பெயினைவிட்டுப் புறப்பட்டார்.
- 1492 - ஸ்பெயினிலிருந்து யூதர்கள் கத்தோலிக்கர்களினால் வெளியேற்றப்பட்டனர்.
- 1645 - முப்பதாண்டுப் போர்: ஜேர்மனியில் ஆலர்ஹைம் எனற இடத்தில்பிரெஞ்சுப் படைகள் புனித உரோமப பேரரசுப் படைகளைத் தாக்கி வெற்றி பெற்றனர்.
- 1678 - அமெரிக்காவின் முதலாவது கப்பல், லெகிரிஃபோன் ரொபேர்ட் லசால் என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1858 - இலங்கை தொடருந்து சேவையை ஆளுநர் சேர் ஹென்றி வோர்ட் ஆரம்பித்து வைத்தார்.
- 1860 - நியூசிலாந்தில் இரண்டாவது மாவோரி போர் ஆரம்பமானது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனி பிரான்சுடன் போர் தொடுத்தது.
- 1934 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் பெரும் தலைவரானார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி பிரித்தானிய சோமாலிலாந்து மீது போர் தொடுத்தது.
- 1949 - தேசிய கூடைப்பந்து சங்கம் ஐக்கிய அமெரிக்காவில் அமைக்கப்பட்டது.
- 1960 - நைஜர் பிரான்சிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1976 - காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 2005 - மவுரித்தேனியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அதிபர் மாவோயா ஊல்ட் தாயா பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.

பிறப்புக்கள்

- 1924 - லியொன் யூரிஸ், அமெரிக்க நாவலாசிரியர் (இ. 2003)
- 1957 - மணி சங்கர், இந்திய திரைப்பட இயக்குனர்


இறப்புகள்

- 1977 - மக்காரியோஸ், சைப்பிரசின் முதலாவது ஜனாதிபதி (பி. 1913)
- 1993 - சுவாமி சின்மயானந்தா, வேதாந்த தத்துவத்தைப பரப்பிய இந்திய ஆன்மிகவாதி (பி. 1916)
- 2008 - அலெக்சாண்டர் சோல்செனிட்சின், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் (பி. 1918)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"



24

...பேட்டிங் செய்பவரை ஆட்டம் இழக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட தங்கள் வேகப்பந்து வீச்சின் மூலம் அவர்கள் கை, கால்களை உடைத்துக் காயப்படுத்த வேண்டும். அல்லது பயமுறுத்த வேண்டும் என்பதில்தான் பாகிஸ்தான் அணியினர் குறியாக இருப்பார்கள். கிரிக்கெட் என்று இல்லை. ஹாக்கியில்கூட அவர்கள் பணி இதுதான். மைதானத்தில் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் எதிர் அணியினரின் கால்களுக்கு இடையே ஹாக்கி மட்டையை நுழைத்து அவர்களை நிலைதடுமாறி கீழே விழ வைப்பதில்தான் அவர்களது முழு கவனமும் இருக்கும். எனவே, பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சைச் சமாளித்து ஆடுவது என்பது அனுபவம் வாய்ந்தவர்களால் மட்டுமே முடிந்த ஒன்று. கவாஸ்கர் ஓய்வு பெற்றுவிட்டார். வெங்சர்கார், மொஹிந்தர் இவர்கள் இருவரும் அணியில் இல்லை. எழுபதுகளின் இறுதியில் களம் இறங்கிய இளைஞன் கபில் தேவின் அதிரடி ஆட்டம், ஆண்டுகள் பல உருண்டோடிய காரணத்தினால் தளர்ந்துவிட்டது. ஆக, பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்ட இந்திய அணி மிகச் சாதாரண வலுவில்லாத அணியாகவே கருதப்பட்டது.

இந்த நிலையில் சின்னஞ்சிறு பாலகனான சச்சின் இவர்களை எதிர்த்து எப்படி விளையாடப் போகிறான் என்பதே அனைவரின் ஐயப்பாடாக இருந்தது. ஆடுவது இருக்கட்டும். வேகப்பந்து வீச்சின் காரணமாக அடிபடாமல் இருந்தாலே போதும் என்றுதான் பெரும்பாலானோர் எண்ணினர். பாகிஸ்தானில் இந்திய அணி தரை இறங்கியது. நவம்பர் மாதம் 1 ஆம் திகதி பாகிஸ்தான் வீரர் இம்ரான்கான் கட்டிக்கொண்டிருந்த புற்றுநோய் மருத்துவமனைக்கு நிதி சேர்க்கும் ஒருநாள் காட்சிப் போட்டி நடைபெற்றது. பிறகு முதல் டெஸ்ட் போட்டிக்கு முந்தைய

### குழந்தையே இங்கு உனக்கு என்ன வேலை?

முதல்தர போட்டியாக ராவல்பிண்டியில் கிரிக்கெட் போர்ட்பேட்ரன் X1 அணிக்கு எதிரான போட்டி நடைபெற்றது. அதில் இந்தியா எடுத்த ரன்கள் 272. சச்சின் 47 ரன்கள் எடுத்த நிலையில் சுழற்பந்து வீச்சாளர் இக்பால் காசிம் வீசிய பந்தில் ஸ்டம்ப் ஆகி ஆட்டம் இழந்தார். 47 ரன்கள் எடுத்ததால் முதல் டெஸ்ட் போட்டிக்கு சச்சின் சந்தேகமில்லாமல் தேர்வானார்.

1989 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் திகதி சச்சின் மற்றும் அவர் குடும்பத்தினருக்கு மட்டுமின்றி அனைவருக்கும் சந்தோஷமான நாள். ஆம் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த இனிய நாளில் 16 ஆண்டுகள் 205 நாட்கள்; என்ற வயதில் சச்சின் தனது முதல் டெஸ்ட் போட்டிக்காக கராச்சியில் களம் இறங்கினார். இந்த டெஸ்ட் போட்டியில் மூன்று இந்திய வீரர்கள் புதிய வரலாறுகளைப் படைத்தனர். முதலாவதாக டெஸ்ட் விளையாடும் மிகக் குறைந்த வயது வீரர் என்ற பெருமை சச்சினைச் சென்றடைந்தது. (உலகளவில் சச்சின் நான்காவது இளம் வீரர்) ஏற்கனவே எல்.சிவராமகிருஷ்ணன் 17 ஆண்டுகள் 118 வயதில் செய்த சாதனையை சச்சின் முறியடித்தார். இரண்டாவது சலில் அங்கோலாவிற்கு இதுதான் முதல் டெஸ்ட் மேட்ச். மூன்றாவது கபில்தேவிற்கு இது நூறாவது டெஸ்ட் போட்டி.



வாக்கரிடம் இருந்து வந்த பந்து எதிர்பாராத நேரத்தில் சச்சினின் மூக்கில் வந்து வேகமாகத் தாக்க சச்சின் நிலை தடுமாறினான். பலமாக அடிபட்டு மூக்கில் இருந்து ரத்தம் ஒழுக சச்சின் கீழே விழுந்தான். உதிரம் சொட்டச் சொட்ட நிற்கும் ஆட்டைச் சுற்றி ரத்த வெறி பிடித்த ஓநாய்க் கூட்டங்கள் நின்று ரசிப்பது போன்று பாகிஸ்தான் அணியினர் சச்சினைச் சுற்றி நின்றிருந்தனர். பாகிஸ்தான் ரசிகர்களோ எங்களுக்கு இந்த ரத்தம் போதாது. இன்னும் வேண்டும் என்று கூறுவது போல் கரகோஷம் எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

**கே. ரமேஷ்** (தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 07 இல் கூட்டெண் 07 இன் பலன்கள்

54

...அசாத்திய ஞானமும் நீதி கட்டுப்பாடும் உடையவர். தியானம் போன்ற துறையில் இறங்கினால் அற்புத அமானுஷ சக்திகளைப் பெறக் கடவுளருள் உண்டு. வாழ்வில் எல்லாக் கட்டத்திலும் இவர்மீது யாராவது அன்பு வைப்பர். இவரும் வயதை, நிலையைப் பாராமல் அன்பு செலுத்துவார்.

முழு கிரக ஆதிக்கம் ஏற்படும் போது பிறந்த கூட்டு எண் ஒரே எண்ணாக அமைவது ஓர் அதிர்ஷ்டம். இது ஒரு யோகம். இது இவர் இருக்கும் வாழ்க்கைத் துறையில் இவரை ஒப்பற்றவராகச் செய்யும். மேலும் இவர்களுடைய பெயரெண் கிரக ஆதிக்கத்தைச் சார்ந்த சம்பவ வாழ்க்கையைத் தரும்.

### தொழில்

கலை ரசிகத் தன்மை மிக இருக்கும். உலக உணர்வும் நன்கு இருக்கும். புலன்கள் கூர்மையாக இயங்கும்.

மேடைப்பேச்சும், எழுத்தும், கவிதை இயற்றுவதும் இவருக்கு அதனால் நன்கு வரும். காதல், பாசம் எல்லாம் சிறப்பாக இருக்கும். ஆனால், வாழ்க்கையில் அவற்றை அனுபவிக்க அதிர்ஷ்டம் இருக்காது. இதற்கேற்ப எதிர்பார்க்கும் தொழிலுக்கான முயற்சி தடைப்படும். பெயர் எண் நன்கு அமைந்திருந்து உயர் படிப்பை அடைந்த மிகச் சிலர் மேலான கல்வியாளராவர். நீதித்துறையில் அரசியலில் இருப்பர். சினிமாத்துறையில் சிறப்பர். நன்கு பாடுபவராகலாம்.

ரசாயனத் தொழிற்சாலையில் லேபரட்டரி கெமிஸ்ட்டாக, மெடிகர் ரெப்சண்டேடிவாக, மதகுரு, போதகராக, யோகப் பயிற்சியாளராக, மந்திர தீட்சை தருபவராக ஆன்மிக நூலியற்றுபவராக, பூசாரியாக மாந்திரீகராக இருப்பர். சோதிடம் கூறுவர்.

சூதாடச் சென்றால் அழிவுதான்.

அரசனைப் போன்ற குணமும் ஆற்றலும் இருக்கும். எத்தொழில் செய்தாலும் மதிப்போடிருப்பர். வெளிநாடு செல்வார்.

அங்கும் வேலை புரிவர். ஆலோசகராக ஓவியராக, காவியம் செய்பவராக அருள்வாக்குக் கூறும் உபாசகராகவெல்லாம் இருப்பர்.

ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், இரும்புக்கடை, மருந்துக்கடை வியாபாரம் செய்வார். எளிமையாக வாழும் இவர்களுக்குப் பொருள் அதிகம் தேடும் முயற்சி உண்டாகாது.

பெயர் எண்ணுக்கேற்ற தொழிலை செய்பவராவர்.

மனோதத்துவ நூலெழுதுவார். மனோத்தத்துவ மருத்துவராகலாம். இசை, நடனம் என கலைகளிலும் யோக வேதாந்தம் சோதிடம் என்று சாத்திரங்களிலும் எழுத்திலும் பேச்சிலும் திறமை மிஞ்சி இருக்கும்.

மந்திர சித்தியும் வழக்கெதிலும் போட்டியிலும் வெற்றியும், உடல், மனம், உலகம், ஆன்மா பற்றிய ஞானமும் உண்டாகும்.


தெய்வ பக்தியும் அனுக்ரஹமும் இருக்குமாதலால் இவைபற்றி எழுதுவதும் பேசுவதும் தொழிலாகும். பத்திரிகை, பதிப்பகம் நல்ல தொழில்களே.

விவசாயம் செய்தலும் பண்ணை வைத்தலும். அக்னியை வைத்துச் செய்யும் தொழிலும், சமையலும் பிழைப்பிற்கு உதவும். பெரும் பணம் சேர்க்கவும் உதவும். கடைசி காலம் யோகம்.

### நோய்

அதிக சிந்தனை, அதிக சூடு நோயுண்டாக்கும். வாதம், பித்தம் கோளாறாகும். மிகச் சிறுவயதில் சிரங்கு சொறி ஏற்படும். ஜுரம் வரும். பிறகு சாதாரணமாக வியாதிகளே ஏற்படாது. திடமான உடலும் மனமும் இருக்கும். உடற்பயிற்சியும் செய்வார்.

50 வயதுக்கு மேல் நரம்புத் தளர்ச்சி ஏற்படும். சர்க்கரை வியாதி ஏற்படும். உள்ளங்கைகளும் பாதங்களும் பாதிக்கப்படும்.



சபல, மனச்சலனம் மேலும் கண் கோளாறைக் கொண்டு வரும். கோபம் அதிகப்படும். சத்தம் சகிக்காது. கனவுகளதிகம் உண்டாகும்.

இதய அடைப்பிற்கு வாய்ப்புண்டு. தோலில் வியர்க்குரு தழும்புகள் நிரந்தரமாக இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியே அளுத்கமவில் இருவர் பலியாகினர்

## உறுதிப்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி

அளுத்கம மற்றும் தர்கா நகர் பகுதிகளில் கடந்த ஜூன் மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்ற வன்செயல்களின் போது இறந்த இருவரும் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியே உயிரிழந்துள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

களுத்துறை நாகொட வைத்தியசாலையின் உதவி சட்ட வைத்திய் ஆதிகாரி ஹேமந்த ஹரிச்சந்திர சில்வா களுத்துறை நீதவான் நீதிமன்றில் மரண விசாரணை அறிக்கையை சமர்ப்பித்து இதனை உறுதி செய்தார். நீதிமன்றின் விசேட அழைப்பாணையை அடுத்து கடந்த வியாழக்கிழமை உதவி சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றில் ஆஜரானார்.

தர்கா நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற வன்செயல்களின் போது உயிரிழந்த மொஹமட் பைரூஸ், மொஹமட் சிராஸ் ஆகிய இருவரதும் மரண விசாரணை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

மொஹமட் பைரூஸ் என்பவரின மரணம் எவ்வாறு நிகழ்ந்தது எனபது பற்றி மீண்டும் மரண விசாரணையொன்றினை நடத்தும் படி இறந்தவர்களின் உரிமைகளுக்காக ஆஜராகிய சட்டத்தரணிகள் கஸ்ஸாலி ஹூசைன் ரமீஷ் பசீர் சிதாரா ஹபுஆரச்சி என்போர் நீதிமன்றில் மனுவொன்றினை முன்வைத்திருந்தனர்.

சமர்ப்பிக்கப்பட்ட மரண விசாரணை அறிக்கையை கவனத்தில் கொண்டதன் பின்பு சடலங்களை தோண்டி வெளியெடுத்து மீண்டும் மரண விசாரணை நடத்துவது பற்றி உத்தரவு பிறப்பிப்பதாக களுத்துறை மேலதிக நீதவான் அயேசா ஆப்தீன் தெரிவித்தார்.

துப்பாக்கி சூட்டினால் மரணம் சம்பவித்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை தெரிவிப்பதால் மீண்டும் மரண விசாரணையொன்றினை நடத்துவதற்கான தேவையேற்படாது என இறந்தவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்தனர். மேலதிக விசாரணை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

குறிப்பிட்ட இருவரினதும் மரணங்கள் வாள்வெட்டு காயங்களினால் சம்பவித்துள்ளதாக பரவலாக பேசப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (6)

# சர்ச்சைக்குரிய சூரா பேரவையின் கூட்டத்தில் அமைச்சர் ராஜித!

சர்ச்சைக்குரிய தேசிய சூரா பேரவையின் கூட்டத்தில் இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன உரையாற்றவுள்ளார்.

இம் மாதம் 13ஆம் திகதி தேசிய சூரா பேரவையின் கூட்டம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

தேசிய சூரா பேரவை பிரிவினைவாதத்தை தூண்டி வருவதாகவும் இதனால் அந்த அமைப்பை தடை செய்ய வேண்டுமெனவும் சிங்கள பௌத்த் கடும் போக்கு அமைப்பான பொதுபல சேனா இயக்கம் கோரி வந்தமை குறிப்பிடத்தக்கது.

சூரா பேரவையை தடை செய்யுமாறு பொதுபலசேனா இயக்கம் அரசாங்கத்திடம் நேரடியாகவே கோரிக்கை விடுத்திருந்தது.

பொதுபல சேனா இயக்கத்தின் நடவடிக்கைகளை பகிரங்கமாக விமர்சனம் செய்து வரும் ராஜித சேனாராட்ன கூட்டத்தின் பிரதம பேச்சாளராக பங்கேற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் தேசிய சூரா பேரவை தங்களை ஓர் புத்திஜீவிகள் அமைப்பாக அடையாளப்படுத்திக்கொண்டுள்ளது.

சூரா என்பது அரேபிய மொழியில் பேச்சுவார்த்தையை குறிப்பதாகவும், முஸ்லிம் சமூகத்தை ஐக்கியப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (6)

# 10 இலட்சம் ரூபாவை வசூலித்த தரகர்களை தேடும் பொலிஸார்

அவுஸ்திரேலியாவிற்கு படகில் அழைத்துச் செல்வதாகக் கூறி இலங்கைத் தமிழ் அகதிகளிடம் 10 இலட்சம் ரூபா இந்தியப் பணத்தை வசூலித்தவர்கள் என்று கூறப்படும் தரகர்களை தமிழகக் பொலிஸார் தேடி வருகின்றனர். கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளை அருகே பட்டத்துவிளையில் ஒரு வீட்டில் சந்தேகத்திற்கிடமாக சிலர் பதுங்கியிருக்கின்றனர் எனக் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதன்பேரில் கியூ பிரிவு இன்ஸ்பெக்டர் சுதிர்லால், களியக்காவிளை இன்ஸ்பெக்டர் சுதாகர் ஆகியோர் தலைமையில் கடந்த செவ்வாயன்று மாலை சோதனை நடத்தியது. அங்கிருந்தவர்களிடம் நடத்திய விசாரணையில் தமிழகத்தில் அடைக்கலம் புகுந்த 11 பேர் இலங்கைத் தமிழ் அகதிகள் எனவும், இவர்கள் கடல்வழியாக படகுகளில் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச்செல்வதற்காக பதுங்கி இருந்தனர எனவும் தெரியவந்தது. இதைத் தொடர்ந்து கோவை, பொள்ளாச்சி, கோட்டூர் அகதிகள் முகாமை சேர்ந்த விஜயேந்திரன் (வயது 22), வெற்றிவேல்(வயது 37), ஜெகன் (வயது36), யோகேஸ்வரன்(வயது 32), யோகவன் (வயது 22), பொள்ளாச்சி ஆழியார் அகதி முகாமைச் சேர்ந்த சசிகுமார்(வயது 32), சந்திரசேனன் (வயது 34), தவராசா(வயது 32), கரூர் மாவட்டம் ராயனூர் ஏதிலிகள் முகாமை சேர்ந்த ஶ்ரீகாந்தன் (வயது 31), திருவனந்தபுரத்தை சேர்ந்த இலங்கைத் தமிழ் அகதி சுபாஷ்(வயது 38), இலங்கை மட்டக்களப்பை சேர்ந்த யுகபிரியன்(வயது 25) மற்றும் திருவனந்தபுரத்தை சேர்ந்த பிரஜித்(வயது30), பைஜு (வயது 30), பிரதீப்(வயது 29) ஆகிய 14 பேரை பொலிஸார் கைது செய்தனர். இதில் சுபாஷும், அவரது நண்பர் மகேந்திரன் என்பவரும் தரகர்களாக செயற்பட்டு, தலா 50 ஆயிரம் ரூபா முதல் ஒரு இலட்சம் ரூபா வரை மொத்தம் 10 இலட்சம் ரூபா வசூலித்தனர் என்பது தெரியவந்தது. இவர்கள் மேலும் பல தரகர்களுடன் சேர்ந்து அப்பாவி தமிழ அகதிகளைத் தொடர்பு கொண்டு அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்கிறோம் என்று கூறி பணம் வசூலித்துள்ளனர். இதேவேளை மகேந்திரன் என்பவரை பொலிஸார் தேடி வருகின்றனர் என இலங்கை இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### சுரபூபதி சொற்பொழிவு

நல்லூர் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனைச் சொற்பொழிவு ,கலைநிகழ்ச்சிகள் என்பன உற்சவ காலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஶ்ரீலஶ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டப முன்றிலில் நடைபெற்று வருகின்றன.


இன்றைய நிகழ்வுகளாக சைவப்புலவர் நித்திய தசிதரன் வழங்கும் சுரபூபதி எனும் விடயத்திலான சொற்பொழிவும் கொக்குவில் ஶ்ரீ கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை, கோண்டாவில் ஶ்ரீ சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலை, குப்பிளான் சொர்க்கவளவு சோதி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6)

### தெய்வீக இசையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு உற்சவ காலங்களில் தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வாக இசையரங்கம் இடம்பெறவுள்ளது.

இதில் பாடலை திருமதி சத்தியபாமா இராஜலிங்கமும் அவருடன் இணைந்து திருமதி கிருஷ்ணப்பிரியா ஆனந்தராஜாவும் வயலின் எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் எம்.சிதம்பரநாதன், கெஞ்சிரா பிரம்மஶ்ரீ சிவசுந்தரசர்மா ஆகியோரும் வழங்கவுள்ளனர். (6)

# நல்லூரான் திருவடிக்கு இன்று மூன்றாம் திருவிழா



## அருள் தருவான் ஆறுமுகன்

விநாயகரின் இளையவனே...
வழுவின்றி நாளும் வரிசையொடு வாழ
வரமது அருளும் வடிவேலா...
நல்லூரின் பதிவாழ் வாசா
தோகை வாகனமதில் எழுந்தருளி
அருள் தருவாயப்பா!

சிந்து சிவதாஸ்

## வருவாயா முருகா

பச்சை மயில் வாகனனே
பன்னிரு கை வேலவனே
பக்தர்களை காத்து வரும்
நல்லை நகர் பெருமானே
வாளோடு வருபவர்களை
வேல்கொண்டு வினை தீர்ப்பானே

க.செல்வமலர்(இடைக்காடு)

## உனை வேண்டி...

வேதனைகள் தாங்காது வேண்டி உனை இறைஞ்ச
சோதனையே மேலும் தொடர்கிறது– தீதறியா
மக்கள் படும் பாடு மாயோன் மருகனுக்கு
விக்கினமாய்த் தோன்றலையோ விளம்பு

சி.வெற்றிவேலு(வட்டுக்கோட்டை)

## நல்லூர்க் கந்தா...

ஆறுமுகம் கொண்ட எங்கள்
ஆறுமுகனே
ஆற்றிலே வீற்றிருக்கும்
ஆறுமுகனே
உந்தன் சேவல் கொடி ஏறும் போது
உந்தன் புகழ்பரவட்டும் முருகா... நல்லூர் கந்தா...

சி.சிறிகரன்(யா/உரு.சை.த.வி)

## அழகனே! அருள் தருவாய்!

நல்லை நகர்க்கந்தா!
நலம் தரஅருள்வாய்!
வேலாய் நிமிர்ந்து நின்று
சேவல் மயில் கொடி கொண்டவனே!
கொடியில் உதித்து குறைதீர்
நிலையாய் பக்தர் நலம் காக்க

செ.சிந்துஜா(யா/உரு.சை.த.வி)

## சேவல் கொடியாட நல்லூர் வேலவனே

சேவல்கொடியாட சோலைமயிலாட செவ்வேலவனார் நல்லூர் முருகா வா
சிவசக்திபாலனே இருசக்தியோடு சரவணபவகுகா ஞான சக்தியாய்வா
காவல் தெய்வமே கலியுகவரதனே கடம்பனே கந்தா காத்தருள்வாய்
கற்பனை கடந்த சோதி ஆறுமுகா காக்ககடவுளாய் எம் உள்ளேவா
காவல்வேலவனே சிவகந்தமுருகா கண்ணீரை மாற்றி வாழ்வு தருவாய்
கார்த்திகேயா எல்லோரையும்கடைக்கண்ணால் காத்தருள்வாயே

நல்லூர்சிவமுருகன் என்.தமிழ்மகன்

## நல்லைக் கந்தன் நனிவெண்பா

ஆர்த்த பிறவித் துயர் நீக்கி யாண்டருளும்
சீர்த்த நல்லூரின் செழுஞ்சுடரே–பார்போற்றும்
பன்னிருகைப் பாலகனே பவவினைகள் நீக்கியெமை
உன்னிருகண் பாராய் உவந்து

கலாபூஷணம் சந்தக் கவிஞர் நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைகேடுகளை அம்பலப்படுத்த திட்டம் தீட்டும் சம்பிக்க ரணவக்க



ஆளும் கட்சியின் ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்தும் திட்டமொன்றை அமைச்சர் சம்பிக்க ரணவக்க முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 5ம் திகதி வெளியிடப்படவுள்ள புத்தகத்தில் இந்த விடயங்கள் வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியின் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் எவ்வாறு ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்றார்கள் அதற்கான ஆதாரங்கள் என்பனவற்றை அம்பலப்படுத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"அதிகாரமும், அரசியல் அதிகாரமும்" என்ற தலைப்பில் இந்த நூல் வெளியிடப்படவுள்ளது.

ஆளும் கட்சியின் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் மேற்கொண்ட ஊழல் மோசடிகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பிலான ஆதாரங்கள், தகவல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆளும் கட்சியினரின் ஊழல் மோசடிகளினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட பாரியளவிலான நட்டங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மின்வலு எரிசக்தி துறையில் இடம்பெற்ற முறைகேடுகள மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகள் போன்றன குறித்தும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாகவே அரசாங்கத்திற்கு எதிரான கடும் விமர்சனங்கள் அரசாங்கத்திற்கு உள்ளேயே வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# சட்டம் ஒழுங்கு; ஐ.தே.க.கவலை

(கொழும்பு)

நாட்டின்சட்டம்ஒழுங்கு நிலைமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கவலை வெளியிட்டுள்ளது. நாட்டில் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை மற்றும் கடத்தல் சம்பவங்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்து சமுத்திரத்தின் முத்து எனவும் தர்ம தீபமாகவும் போற்றப்பட்டு வந்த இலங்கை இன்று குற்றச் செயல்கள் அதிகளவில் இடம்பெறும் நாடாக மாற்றமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கடத்தல்கள், கொலைகள், கொள்ளைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பிலான செய்திகளே பத்திரிகைகளில் இன்று அதிகளவில் பிரசுரமாகி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமைகளில் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இந்த அரசாங்கமுமே பொறுப்புச்சொல்ல வேண்டுமென குறிப்பிட்டுள்ளது. 147 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட இலங்கை பொலிஸ்துறைத் திணைக்களம் தற்போதைய நிலைமைகள் குறித்து திருப்தி கொள்ள முடியாது என சுட்டிக்காட்டியுள்ளது. நாட்டில் இடம்பெறு வரும் குற்றச் செயல்களை தடுத்து நிறுத்த அரசாங்கம் மெய்யாக அரப்பணிப்புடன் செயற்பட்டால் மட்டுமே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என தெரிவித்துள்ளது. (6)

# நவுறு தீவுக்கு ஈழ அகதிகள்

(கொழும்பு)

மேற்கு அவுஸ்திரேலிய முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் அனைவரும் இந்தியாவுக்கு திரும்ப மறுத்ததை தொடர்ந்து நவுறுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய தூதரக அதிகாரிகளை புகலிடக் கோரிக்கையாளர்கள் சந்திக்க மறுத்ததை தொடர்ந்தே இந்த நடவடிக்கையை அவுஸ்திரேலியா எடுத்துள்ளது.

இதேவேளை டொனி அபொட் அரசாங்கம் இரவோடு இரவாக நவுறுவிற்கு கடத்தியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (6)


# ஒழிக்க வேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் தமிழ், முஸ்லிம் கிராமங்கள் இருக்கக் கூடாது என்பதாக பொதுபல சேனா பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வலியுறுத்தியுள்ளார்.

பொதுபல சேனா அமைப்பின் முக்கிய செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் ஒன்றின்போது இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

வாக்கு வங்கியைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் இலங்கையின் பல பிரதேசங்களிலும் தனி தமிழ், முஸ்லிம் கிராமங்கள் இருப்பதை கண்டு கொள்வதில்லை, ஆனால் இனி வரும் காலங்களில் அவற்றை மாற்ற வேண்டும்.



ஒவ்வொரு கிராமங்களிலும் சிங்கள மக்கள் கலந்து வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும், அதற்கேதுவாக எதிர்காலத்தில் தமிழ், சிங்கள கிராமங்களின் பெயர்களும் மாற்றப்பட வேண்டும்,

இந்த செயற்திட்டத்தை பௌத்த பிக்குகளின ஆசியுடன் பொது மக்கள் முன்னெடுக்க வேண்டும்.

சட்டரீதியாகவோ, சட்டத்திற்குப் புறம்பான வழியிலோ அனைத்துப் பிரதேசங்களிலும் சிங்கள மக்கள் பரந்து வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும், இதற்காக மகாநாயக்க தேரர்களின் வழிகாட்டு தலையும் பெற்றுக் கொள்ள முயற்சிக்கப்படும், அவர்கள் எதிர்த்தாலும் இந்தச் செயற்திட்டம் தடையின்றி முன்னெடுக்கப்படும் என்றும் கல கொட அத்தே ஞானசார தேரர் தொடர்ந்தும தெரிவித்துள்ளார்.

இச் செயற்திட்டத்தை முன்னெடுகக்கும் வகையிலான பயிற்சி மற்றும செயலமர்வுகளை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கவும் பொதுபல சேனா தீர்மானித்துள்ளதாக தகவல்கள வெளியாகியுள்ளன. (6)

# எபோல வைரஸால் அச்சுறுத்தல் இல்லை

(கொழும்பு)

இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணி ஒருவர் பயங்கரமான எபோல வைரஸை கொண்டுவரும் வாய்ப்பு மிக அரிதானது எனக்கருதும் அரசாங்க நோய்ப் பரம்பரயியல் அலகின் பணிப்பாளர் வைத்தியர் பிரபா பலிகவதன, எபோலா இங்கு காணப்படுமிடத்து அதனைக்கையாளும் ஆற்றல் இலங்கைக்கு உண்டென கூறினார்.

எபோல வைரஸ் முதலில் கொங்கோவில் 1976 இல் இனங் காணப்பட்டது.


மரணத்தை தரவல்ல இந்நோய் தற்போது லைபீரியா, சியாரா லியோன் போன்ற நாடுகளுக்கு பரவிவிட்டது.

இந் நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவது மிகக்குறைவு என்பதால் இலங்கையில் இந்நோய் பரவும் வாய்ப்பு மிக குறைவு என டாக்டர் பலிகவதன கூறினார்.

ஓர் எபோல நோயாளி காணப்படின் முதலில் அவரை அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். அங்கு அவர் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

எபோல வைரஸ் வளியால் பரவுவதில்லை. இது இரத்தம் மற்றும் உடலூறவு மூலமே பரவுகின்றது.

எனவே, எபோல நோயை தடுப்பது இலகுவானது என அவர் மேலும் தெரிவித்தார். (6)




சுவிஸ் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தினால் வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட குடிநீர் பவுசர் கையளிக்கும் வைபவம் கடந்த 30 ஆம் திகதி புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய சேவை வளாக மண்டபத்தில் இடம்பெற்ற போது...

# தபால் கட்டணங்கள் 7ஆம்திகதி அதிகரிப்பு

தற்போது நடைமுறையிலுள்ள தபால் கட்டணங்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிமுதல் அதிகரிக்கப்படுமென தபால்மா அதிபர் ரோஹண அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய சாதாரண தபாலுக்கான முத்திரைக் கட்டணம் ஐந்து ரூபாவிலிருந்து பத்து ரூபாவாகவும் தபாலட்டையின் விலை எட்டு ரூபாவாகவும் அதிகரிக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

20 கிராம் வியாபாரக் கடிதங்களின் கட்டணம் 15 ரூபாவாகவும் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 20 கிராமிற்கும் பத்து ரூபா வீதமும் அறிவிடப்படும்.

பார்சல் தபால்களுக்கு 250 கிராமிற்கு 90 ரூபாவும், 500 கிராமற்கு 150 ரூபாவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பதிவுத் தபால்களுக்கான தற்போதைய கட்டணங்களில் மாற்றமில்லை. இந்தக் கட்டண உயர்வு சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் 31ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளதாகவும் தபால்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# யுத்தக் குற்றச் செயல்களுக்கு எதிராக வழக்குத் தொடருமா அமெரிக்கா?

அரசாங்க யுத்தக் குற்றச் செயல்களுக்கு எதிராக அமெரிக்கா வழக்குத் தொடரக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பிலான சம்பவங்களின் அடிப்படையில் இந்த வழக்குத தொடரத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"ஜஸ்ட் சிக்கியுரிட்டி" என்ற அமெரிக்க இதழின் இணைப் பிரதம ஆசிரியர் ரயன் குட்மேன் என்பவரினால் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் அமெரிக்க காங்கிரஸ் சபையின் உறுப்பினர்களுக்கு வழங்கிய தகவல்களில் அவர் இந்த விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல் விசாரணைகளை நடத்துவது அதற்கான சட்ட பின்னணி என்பன குறித்து ரயன் குட்மென் விபரித்துள்ளார்.

1966ஆம் ஆண்டு யுத்தக் குற்றச் செயல் சட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடரக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பிரஜைகளை இந்த சட்டத்தின் வழியாக தண்டிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு போதியளவு ஆதாரங்கள் இல்லையென்றால், அமெரிக்க நிதித் திணைக்களத்தினால் சிவில் வழக்கு ஒன்றைத் தொடர முடியும் என குட்மேன் பரிந்துரை செய்துள்ளார்.

அமெரிக்காவிற்கு வெளியே அமெரிக்கப் பிரஜை ஒருவர் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு எதிராக மேற்கொள்ளும் கடுமையான குற்றச் செயல்களுக்கு அமெரிக்க உள்நாட்டு சட்டங்களின் அடிப்படையில் விசாரணை நடத்தி தண்டனை விதிக்கப்பட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் சிவில் சட்டத்தின் அடிப்படையிலும் நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான சாட்சியங்களை மறைத்தல் அல்லது அடக்குமுறைக்கு உட்படுத்தல் தண்டனைக்குரிய குற்றச் செயலாகும் எனவும் அந்தப் பிரிவின் அடிப்படையில் வழக்குத் தொடர முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சாட்சியங்களை ஒடுக்குவதற்கு எடுத்த முயற்சிகள் தொடர்பிலான திகதி வாரி தகவல்களையும் குட்மேன் தனது அறிக்கையில் இணைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரை ஆதரிக்கும் கூட்டமைப்பு?



அடுத்த வருட தொடக்கத்தில் ஜனாதிபதித் தேர்தலை அரசாங்கம் நடத்தலாமென்ற எதிர்பார்ப்பும் ஊகங்களும் அதிகரித்துள்ள நிலையில், இந்தத் தேர்தலில் தமிழர் தரப்பின் வியூகங்கள் குறித்த வாதப் பிரதிவாதங்களும் ஆரம்பமாகிவிட்டன.

குறிப்பாக தமிழர்களின் அரசியலைக் கையாளும் பிரதான தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு எப்படி இருக்க வேண்டுமென்று ஒரு தரப்பினர் வலியுறுத்தவும் அழுத்தம் கொடுக்கவும் தொடங்கிவிட்டனர். இன்னும் சிலரோ தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நகர்வு எவ்வாறு இருக்கக் கூடாதென்று எச்சரிக்கவும் செய்கின்றனர்.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவதை அடிப்படையாகக் கொண்ட நகர்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த 24 ஆம் திகதி கொழும்பு நகர மண்டபத்தில் கோட்டே நாகவிகாரையின் விகாராதிபதி மாதுளுவாவே சோபித தேரரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கூட்டம் இதற்குச் சிறந்த உதாரணம்.

இந்தக்கூட்டத்தில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை ஒழிப்பது. 18 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாமல் செய்து மீண்டும் 17 ஆவது திருத்தச்சட்டத்தில் இடம்பெற்றிருந்தவற்றை நடைமுறைக்கு கொண்டுவருதல் ஆகியவற்றை முன்னிறுத்தி பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டுமென்ற கருத்து எதிரொலித்தது. எதிரணியிலுள்ள முக்கிய தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க, சரத் பொன்சேகா, இரா.சம்பந்தன், சுவில் ஹந்துன்நெத்தி போன்றவர்களுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். அதுமட்டுமன்றி ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியரத்ன தேரரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

அவர் ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை ஒழிப்பது குறித்து பேச்சு நடத்தியிருந்தார். ஆக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பதை மையப்படுத்தி, பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த எதிர்க்கட்சிகளிடத்தில் மட்டுமன்றி ஆளும் கட்சிக்குள்ளேயும் ஆதரவு இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் நாளுக்குள்நாள் வலுத்துவரும் முரண்பாடுகளும் மோதல்களும் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தும் முயற்சிகளை பலப்படுத்தியுள்ளன. அதேவேளை அரசாங்கத் தரப்பை இது பலவீனப்படுத்தி வருகிறது என்பதையும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

கடந்த வாரம் நடந்த கூட்டத்தில் பொதுவேட்பாளராக முன்னாள் தலைமை நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவை முன்னிறுத்துவது குறித்து வலுவாக ஆராயப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தினால் பழிவாங்கப்பட்ட அவர், அரசாங்கத்துடன் ஒத்துழைக்கத் தவறியதற்காக தனது பதவியையும் இழக்கும் நிலை ஏற்பட்டது. அரசியல் சார்பில்லாத ஒருவராக இருப்பதால் சிராணி பண்டாரநாயக்கவை பொதுவேட்பாளராக நிறுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் மத்தியில் ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது. ஏனென்றால் எதிர்க்கட்சிகள் எல்லாவற்றுக்குமே பொதுவேட்பாளராக நிறுத்தப்படுபவர் குறித்த சந்தேகம். அச்சம் இருக்கிறது.

சந்திரிகா குமாரதுங்கவும் கூட, ஆரம்பத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிக்கும் வாக்குறுதியுடன்தான் அரசியலுக்கு வந்திருந்தார். ஒன்றுக்கு இரண்டு முறை ஜனாதிபதியாக பதவி வகித்திருந்த அவர், அந்தப் பதவியில் அமர்ந்த பின்னர் அதனையும் தன்னையும் வலுப்படுத்திக் கொள்வதிலேயே அக்கறை செலுத்தியிருந்தார். அதுபோலவே தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும்கூட, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிக்கும் வாக்குறுதியுடன்தான் பதவிக்கு வந்திருந்தார். மக்கள் விடுதலை முன்னணி அவருக்கு ஆதரவளித்து அரியணை ஏற்றியதற்கு அதுவும் ஒரு காரணம்.

ஆனால் ஜனாதிபதி பதவியை இரண்டு முறை வகித்த போதும் மஹிந்த ராஜபக்ச அதனை ஒழிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக அதனைப் பலப்படுத்தி அடுத்த முறையும் தன்னை அதிகாரத்துக்கு கொண்டுவருவதற்கான வழிமுறைகளையே அவர் தேடியிருந்தார். ஆக இதுவரையில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை வகித்த டி.பி.விஜேதுங்க தவிர்ந்த வேறு எவருக்குமே அந்தப் பதவியில் அமர்ந்துகொண்டதும் அதனைக் கைவிடுவதற்கு மனம் வரவில்லை.

அது ஒரு வசியம்மிக்க அரியாசனம், அதனால் தான் அதை எட்டிப் பிடிப்பவர்கள் எவராலும் உதறித் தள்ளிவிட்டுப் போக முடியவில்லை. இப்படிப்பட்ட நிலையில்தான் ஏதாவது அரசியல் கட்சியில் செல்வாக்கைப் பெற்ற ஒருவரை பொதுவேட்பாளராக நிறுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் மத்தியில் அவ்வளவாக விருப்பமில்லை.

அரசியல் பின்புலம் இல்லாத ஒருவரை முன்னிறுத்தினால் அவரால் நாடாளுமன்றத்தை தன்கைக்குள் போட்டுக்கொள்ள முடியாது. எனவே, குறிப்பிட்ட காலத்துக்குள் தமது தேவை நிறைவேற்றப்படுமென்று எதிர்க்கட்சிகள் நம்புகின்றன. இதனால்தான் சிராணி பண்டாரநாயக்கவை பொதுவேட்பாளராக நிறுத்துவதற்கு ஆதரவு அதிகம் இருப்பதாகத் தெரிகிறது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் பொதுவேட்பாளராக முன்னிறுத்திய ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு கிடைத்த பெரும் ஆதரவு, சிராணி பண்டாரநாயக்கவை எதிர்க்கட்சிகள் அதிகம் நம்புவதற்கு முக்கிய காரணம் எனலாம். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் இணைந்து பொதுவேட்பாளராக முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை நிறுத்தியிருந்தன. ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை தோற்கடிக்க முடியாது போனது.தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சரத் பொன்சேகாவை ஆதரித்திருந்தும் தமிழ் மக்கள் அவருக்காக வாக்களிக்கத் தயங்கியிருந்தனர். 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த போருக்கு தலைமை தாங்கியவர் சரத்பொன்சேகா. அந்தப் போரினால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் ஆறாத நிலையில் இடம்பெயர்ந்தவர்கள் கூட முகாம்களில் அடைபட்டுக்கிடந்த நிலையில் அந்தத் தேர்தல் நடத்தப்பட்டது. போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களால் போருக்கு தலைமை தாங்கிய சரத் பொன்சேகாவை அப்போது ஆதரிக்க முடியவில்லை.

ஆனால், வடக்கு கிழக்கில் மஹிந்த ராஜபக்சவை விட சரத் பொன்சேகாவுக்கே அதிகளவு வாக்குகள் கிடைத்திருந்தன. அதற்கு காரணம் அவர்மீது கொண்ட நம்பிக்கை என்றோ, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஆதரவை பெற்றவர் என்றோ கருத முடியாது. அதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மீதான வெறுப்புணர்வின் உச்சமாக கருதலாம். எவ்வாறாயினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் முழுமையாகவே சரத் பொன்சேகாவுக்கு கிடைத்திருந்தாலும்கூட அவரால் வெற்றி பெற்றிருக்க முடியாது. ஏனென்றால் அவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் பெற்றிருந்த வாக்குகளுக்கு இடையிலான வித்தியாசம் மிகவும் அதிகமானது. ஆனால், 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் நிலைமை அவ்வாறானதாக இருக்கவில்லை.

அப்போது தமிழர்களின் வாக்குகள் வெற்றியை தீர்மானிக்கத்தக்கதாக இருந்தன. விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஏற்று வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அப்போது வாக்களிக்காமல் இருந்தனர். அதனால் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரசிங்க தோல்வியைத் தழுவினார். அப்போது தமிழ் மக்களை வாக்களிக்க விடுதலைப் புலிகள் அனுமதித்திருந்தால் நிலைமை தலைகீழாக மாறியிருக்கும். ஏனென்றால் மிகக் குறுகிய எண்ணிக்கையான வாக்குகளின் வித்தியாசத்தில்தான் ரணில் விக்கிரமசிங்கவின் தோல்வியும் மஹிந்த ராஜபக்சவின் வெற்றியும் நிகழ்ந்தன.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதில் தமிழர் தரப்பு தோல்வி கண்டது. கடந்தமுறை அதற்கான வாய்ப்பை பெற முயற்சித்தபோதும் அது பயனளிக்கவில்லை. கடந்தமுறை பொதுவேட்பாளராக சரத் பொன்சேகாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரே மனத்துடன் முன்னிறுத்தியபோதே, குழப்பங்களும் கருத்து முரண்பாடுகளும் அதிகம் ஏற்பட்டிருந்தன.

ஏனென்றால் அவரை முன்னிறுத்துவதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்களுக்கு என்ன இலாபம் கிட்டுமென்ற வலுவான கேள்வி தமிழர்களிடத்தில் இருந்தது. அதற்குரிய சரியான பதிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கொடுக்கவும் முடியவில்லை. அதைவிட மஹிந்த ராஜபக்சவையும் சரத்பொன்சேகாவையும் தமிழர்களால் அப்போது வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை. இரண்டுமே ஓர் உருவத்தின் இரு நிழல்களாக தெரிந்தன. இந்தப் பின்னணியில் அடுத்து நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எத்தகைய அணுகுமுறையை கடைப்பிடிக்கலாம் என்ற கேள்வி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்கனவே தோன்றிவிட்டது. ஏனென்றால் இந்த ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக அடையப்போகின்ற விளைவு தமிழர்களுக்கு எத்தகைய பயனைத் தருமென்று ஆராயப்பட வேண்டியது அவசியமாகும்.

எந்த ஜனாதிபதியாலும் எந்த அரசியல் கட்சியாலும் தீர்க்கப்படாமல் இழுபறிப்பட்டுள்ள தமிழர் பிரச்சினைக்கு முடிபு காண்பதற்கான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படாத நிலையில், ஜனாதிபதித் தேர்தலை அதற்கான துருப்புச் சீட்டாகப் பயன்படுத்திக்கொள்வது குறித்து கூட்டமைப்பு சிந்திக்கலாம். அதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்போ, 17 ஆவது திருத்தச்சட்டத்தை மீள நிலைப்படுத்துவதோ தமிழர்களுக்கென்று தனியாக எந்த நலனையும் கொண்டு வந்து விடப்போவதில்லை.

ஒருவேளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச தோல்வியடைந்து நிறைவேற்ற அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டுவிட்டாலும் கூட, நிறைவேற்று அதிகார பிரதமர் பதவியை அவர் கையில் எடுக்க வாய்ப்புகள் உள்ளன. எனவே, இந்த ஒரு விடயத்துக்காக தமிழர்களின் வாக்குகளை பணயமாக்குவது சரியானதா என்ற கேள்வி எழுகிறது. இன்னொரு பக்கத்தில் தமிழர் தரப்பின் அடிப்படை நோக்கம் என்னவென்று பார்க்கவேண்டும். அதாவது மஹிந்த ராஜபக்சவை பதவியிலிருந்து இறக்குவதா தமிழர் பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதற்கு ஒரு வழி தேடுவதா என்று தீர்மானிக்கவேண்டும்.

பெரும்பாலான எதிர்க்கட்சிகள் பொது நிலைப்பாடு குறித்துப் பேசினாலும் அவற்றின் முக்கிய இலக்கு மஹிந்த ராஜபக்சவை பதவியிலிருந்து விலக்குவதே என்பதில் சந்தேமில்லை. ஏனென்றால் அவரதும் அவரது குடும்பத்தினதும் செல்வாக்கு அரசாங்கத்துக்குள் வலுப்பெறுவது எதிர்க்கட்சிகளுக்கு அச்சத்தைக் கொடுக்கிறது. ஆனால், தமிழ் மக்களை பொறுத்தவரையில் அவரது அசுர வளர்ச்சி பற்றி அலட்டிக்கொள்வதாக இல்லை. ஏனென்றால் அவர்கள் இதுபோன்ற எதிர்ச்சக்திகளை தாங்கிப் பழக்கப்பட்டுப்போனவர்கள்.

இந்தத் தேர்தலில் மஹிந்த ராஜபக்சவை தோற்கடிப்பதால் என்ன இலாபம் கிட்டும்? அவரை தோற்கடிக்காமல் விடுவதால் என்ன நட்டம் ஏற்படும்? என்றும் கவனத்திற்கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி இந்தத் தேர்தலில் பொதுவேட்பாளரை ஆதரிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஒரு வேட்பாளரை நிறுத்தி பலத்தை நிரூபிக்க வேண்டுமென்ற கருத்தும் உள்ளது. ஆனால் அதனால் என்ன இலாபம் கிடைக்கப்போகிறது என்ற கேள்விகளும் உள்ளன. தமிழர் ஒருவரால் ஒருபோதும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறமுடியாது என்ற நிலையில் பலத்தை நிரூபித்து என்ன பயன்? முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைக்காவிட்டால் இரண்டாவது விருப்பு வாக்குகள் எண்ணப்படும். அத்தகைய சூழலுக்குள் தள்ளுவதால் தமிழர்களுக்கு என்ன பயன் கிட்டப்போகிறது? இப்படி எல்லா விதமான யோசனைகளும் அவை குறித்த கேள்விகள் சந்தேகங்களும் எழுப்பப்படு கின்றன.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து சரியானதொரு முடிபை எடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கால அவகாசம் நிறையவே உள்ளது. இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரு கருவியாக எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெளிவான முடிபை அவர்கள் எடுக்க முடியும். ஆக்கபூர்வமான ஆலோசனைகள் அனைத்தையும் உதறித்தள்ளிவிடாமல், சீர்தூக்கி ஆராய்ந்தால் தெளிவானதொரு பதில் கிடைக்கக் கூடும். அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டுமன்றி தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் உதவியாக அமையலாம்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சியாளர்கள் ஜெனீவா பயணம்!


## ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்- ஆணைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

சாட்சியாளர்கள் ஜெனீவா பயணம் செய்ய ஐக்கிய நாடுகள் அமைப்பு ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டுமென இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரதீபா மஹானாம ஹேவா தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ஐக்கிய நடுகள் மனிதவுரிமைப் பேரவையின் பிரதிநிதிகள் குழு. இலங்கையிலிருந்து சாட்சியமளிப்போர் ஜெனீவாவிற்கு சென்று சாட்சியங்களை வழங்க தேவையான ஒழுங்குகளை செய்து கொடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும். இந்த விடயம் நடைமுறைச் சாத்தியமாகுமா என்பது சந்தேகமே என அவர் குறிப்பிட்டுள்ளார். சாட்சியாளர்களுக்கு ஜெனீவா பயணம் செய்ய தேவையான போக்குவரத்து ஏற்பாடுகளை



செய்வதற்கு பாரியளவில் செலவாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஸ்கைப் உள்ளிட்ட வீடியோ கருவிகள் ஊடாக சாட்சியங்களை பதிவு செய்தல் எந்தளவிற்கு உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என்பது கேள்விக்குறியாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவா அல்லது பிறிதொரு நாட்டில் சாட்சியாளர்ளை நேரடியாக அழைத்து சாட்சியங்களை திரட்டுவது மிகவும் சிறந்த வழியாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்துக்கள் தமது தனிப்பட்ட கருத்துக்கள் எனவும். மனிதவுரிமை ஆணைக்குழுவின் கருத்தாகாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# சிறுவன் மீட்பு

(கொழும்பு)

கடத்திச் செல்லப்பட்ட மீகலெவ - குணுபொலகம பிரதேச வியாபாரியின் மூன்று வயது சிறுவன் மீட்கப்பட்டுள்ளான்.

டனிது யசீன் என்ற சிறுவனே குற்ற புலனாய்வு பிரிவினரால் கல்கமுவ பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த 28ஆம் திகதி இரவு சிறுவன் கடத்திச் செல்லப்பட்டான்.

மோட்டார் சைக்கிளில் குறித்த வியாபாரியின் வீட்டுக்கு வந்த அடையாளம் தெரியாத நால்வர் இந்த கடத்தலை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் இதன்போது சந்தேகநபர்களால் வியாபாரி மற்றும் அவரது ஆறு வயது மகளும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். (6)

# உபுல் ஜயசூர்ய மீண்டும் பொலிஸில் முறைப்பாடு



(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூர்ய தன்னை இனந்தெரியாத நபர்கள் பின் தொடர்வதாக மீண்டும் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். கொழும்பில் அமைந்துள்ள தனது அலுவலகத்திற்கு வெளியே சிவிலுடை அணிந்த இனந்தெரியதாத நபர்கள் இரண்டு தடைவை நடமாடியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது அலுவலகத்திற்கு அருகில் தான் வாகனத்தை நிறுத்துமிடத்தில் அவர்கள் காத்திருந்ததாகவும் எனினும் தான் வேறு வாகனத்தினை பயன்படுத்தியதால். அவர்கள் காத்திருந்து விட்டு பொது நூலகத்தை நோக்கி நடந்து பின்னர் இலக்கத்தகடற்ற சிவப்பு நிற வாகனமொன்றில் ஏறிச்சென்றதை கண்ணால் கண்டவர்கள் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் மாலை 5.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் தனது அலுவலகத்தில் காத்திருந்ததாகவும் அவர் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தனக்கு பாதுகாப்பளிப்பதற்காகவே வந்துள்ளதாக தெரிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# சோபித தேரருக்கு கடும் அச்சுறுத்தல்

(கொழும்பு)

சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் அழைப்பாளர் மாதுலுவாவே சோபித தேரருக்கு கடும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் நடவடிக்கைகளை இடை நிறுத்திக் கொள்ளுமாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர்களினால் தொலைபேசி மூலம் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளாவிட்டால் பாரிய பாதக விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை. தமது நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படும் வகையில் சில அரச ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டு வருவதாக மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அச்சுறுத்தல்கள் சேறு பூசல்களின் மூலம் தமது செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாது எனவும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் முனைப்புக்கள் தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இணைய தளமொன்று உருவாக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (6)

# வாரம் ஒரு தகவல்

## சரித்திரச் சம்பவம்

"நல்வாழ்த்துக்கள்"

"என்ன... திடீரென்று"

"இன்றைக்கு உங்களுடைய பிறந்தநாள் சேர்"

"ஓ... மறந்துவிட்டேன்"

"என்ன இது... நீங்கள் ஒரு சரித்திரப் பேராசிரியர். சரித்திரக்கால சம்பவங்களையெல்லாம் சரியாக ஞாபகம் வைத்திருக்கிறீர்கள், ஆனால் உங்களுடைய பிறந்தநாளை மறந்து விடுகிறீர்கள்"

"ஹி! அது இருக்கட்டும். உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா?

"என்ன... சரித்திர விடயம் ஏதாவது சொல்லப் போகிறீர்களா?"

"ஆமாம். 1957 இல் நடந்த சம்பவம் செக்கோஸ்லா வாக்கியாவில் சாத்தான் ஏரி என்று ஒரு ஏரி உண்டு. அந்த ஏரியில் ஒரு பையன் தவறி விழுந்து விட்டான். அவனைத் தேடி நீச்சல் வீரர்கள் போனார்களாம். ஒரு ஆழமான இடத்தில் ஏரியின் தரைப் பகுதியில் குதிரைகள் பீரங்கி சகிதமாக ஜேர்மன் படைப்பிரிவு ஒன்று போருக்கு தயாராக காத்துக் கொண்டிருந்ததாம்"

"ஆச்சரியமாக இருக்கே... அது எப்படி?"

"நீச்சல் வீரர்கள் கரையேறி வந்து இந்த விடயத்தை கூறியதும் எல்லோருக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்ததாம். ஆனால் அதன் பின்னர் பலர் ஆராய்ச்சி செய்து உண்மையைக்கண்டு பிடித்தார்களாம்"

"என்ன அது?"

"1945 இல் இரண்டாவது உலகப்போரின் இறுதிக் கட்டத்தை நாஜிப்படைகள் ரஷ்யக் குளிருக்குப் பயந்து பின்வாங்கியதால் அல்லவா? அப்போது ஜேர்மன் படைப்பிரிவொன்று இந்த ஏரி வழியாக ஓடிவந்து கொண்டிருந்தபோது பனிப்பாறை பிளந்து உள்ளே போய்விட்டது. அப்படியே சமாதியாகி விட்டது. அதைத்தான் இந்த வீரர்கள் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள்"

"உங்களிடம் வந்துவிட்டால் பழையகால சமாச்சாரங்களுக்கு பஞ்சமேயில்லை சேர். செவிக்கு விருந்து கொடுத்து விட்டீர்கள். உங்கள் பிறந்தநாள் அதுவுமாக வாய்க்கும் அதுமாதிரி ஏதாவது கொடுக்கக் கூடாதா"

"இதோ வைத்திருக்கிறேனே லட்டு. எடுத்துச் சாப்பிடுங்க"

"தாங்ஸ் சேர். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ... சென்ற வருடம் உங்கள் பிறந்தநாளுக்கும் லட்டுத்தான் கொடுத்தீர்கள். அதுவும் நன்றாக இருந்தது. அதேபோல் இதுவும் நன்றாக இருக்கிறது"

"அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை"

"ஏன்?"

"அதுவேதான் இதுவும். அப்பொழுது தயார் பண்ணியதுதான்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனலைதீவு மகா கணபதிப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றபோது... (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)




இலங்கை தொழிற்பயற்சி அதிகார சபையினால் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலத்திற்கு நடைபாதை அமைத்துக்கொடுக்கப்பட்டது. இதன்போது அதிகாரசபை தொழில்நுட்ப பேராசிரியர் மோகனச்சந்திரன் மற்றும் கட்டுமானப் பணியில் ஈடுபட்ட இராணுவப் பயிற்சியாளர்கள், வித்தியாலய அதிபர் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம்.

நிழல்கள்



யா/உடுவில் மான்ஸ் த.க பாடசாலையில் ஓய்வுபெற்ற அதிபருக்கான பிரிவுபசார விழாவும் புதிய அதிபருக்கான வரவேற்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது புதிய அதிபராக நியமனம் பெற்ற இரா.ஜெயக்குமார் ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர் ஐ.விஜயகாந்தனுக்கு வாழ்த்துப்பா மடலினை கையளிப்பதையும் அருகில் பாரியார் திருமதி.பா.விஜயகாந்தன் நிற்பதையும் படத்தில் காணலாம்.



தேசியமட்ட தமிழ் மொழித்தினப் போட்டியின் வில்லுப்பாட்டுப் போட்டியில் தேசிய மட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றது. இதில் வில்லுப்பாட்டுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள், கல்லூரி அதிபர் வீ.கணேசராசா, ஆசிரியர்கள் நா.விமலநாதன், திருமதி.ம.செல்வரத்தினம் ஆகியோருடன் நிற்பதை படத்தில் காணலாம்.



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் இந்து ஒளி ஆன்மீக சஞ்சிகை வெளியீடு கீரிமலையில் அமைந்துள்ள இந்து மாமன்ற மண்டபத்தில் அண்மையில் வெளியிடப்பட்டது. இதன்போது முதல் பிரதியை இந்து மாமன்றத்தின் தலைவர் க.திருநீலகண்டன் வெளியிட்டு வைக்க நல்லை ஆதீன குருமுதல்வர் பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

(படம் :- மானிப்பாய் செய்தியாளர்)




சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீர மாகாளி அம்பாள் ஆலயத்திற்கு அடியவர்களால் அமைக்கப்பட் 23 அடி உயரம் கொண்ட புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழாவும் சிற்பத் தேர் உருவாக்கத்தில் பங்கேற்ற கலைஞர்கள் கௌரவிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சித்திரத் தேரினை அடியவர் புடைசூழ இழுத்துச் செல்வதையும் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே நேரத்தில் 5 படங்களை தயாரிக்கிறார் குஷ்பு!



அரசியல் கோதாவில் இருந்து விலகி விட்ட குஷ்பு இப்போது சின்னத் திரையில் மட்டும் ஒரு சில நிகழ்ச்சிகளில் நடித்து வருகிறார். அதனால் முழுநேர தயாரிப்பாளராக முடிவெடுத்துள்ளார். ஏற்கெனவே கிரி,ரெண்டு. நகரம் மறுபக்கம், கலகலப்பு ஆகிய படங்களை தயாரித்திருப்பவர், ஆனால், இப்போது ஒரே நேரத்தில் 5 படங்களை தயாரிக்க திட்டமிட்டுள்ளாராம் குஷ்பு. அப்படி தான் தயாரிக்கும் படத்தை தனது கணவர் சுந்தர்.சி மட்டுமின்றி மற்ற இயக்குநர்களுக்கும் இயக்க வாய்ப்பு கொடுக்கப் போகிறாராம். அதோடு ஏற்கனவே ஒரு படத்தில் நடிக்க சிவகார்த்திகேயன் ஹன்சிகாவை புக் பண்ணிவிட்டவர், மேலும் சில நம்பிக்கைக்குரிய நடிகர் நடிகைகளுக்கு அழைப்பு விட்டு வருகிறாராம்.

# திரை விமர்சனம்

## திருமணம் எனும் நிக்காஹ்



சொப்ட்வேர் இன்ஜினியராக பணிபுரியும் ஜெய், சென்னையில் இருந்து கோவை செல்வதற்காக ரயிலில் செல்கிறார். ரயிலில் டிக்கெட் கிடைக்காததால் முஸ்லிம் ஒருவருடைய பெயரில் முன்பதிவு செய்யப்பட்ட டிக்கெட்டில் பயணம் செய்கிறார். அதே போல நஸ்ரியாவும், தனது முஸ்லிம் தோழி ஒருவரின் பெயரில் வேலை விடயமாக கோவை செல்கிறார். ரயிலில் இருவரும் முஸ்லீம் என்றே அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர். ஆனால் இருவருமே இந்து குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

இதனிடையே ரயிலில் ஏற்படும் ஒரு பிரச்சினையில் இருந்து நஸ்ரியாவை ஜெய் காப்பாற்ற இருவருக்கும் நட்பு ஏற்படுகிறது. பின்னர் இரண்டு நாள் கழித்து சென்னை திரும்பும்போது இருவரும் தற்செயலாக மீண்டும் சந்திக்கின்றனர். ஒருவருக்கொருவர் மொபைல் நம்பரை பரிமாறிக்கொள்கின்றனர். நட்பாக ஆரம்பித்த அவர்களுடைய உறவு பின்னர் காதலாக மாறுகிறது. இருவரும் ஒருவருக்கொருவர் முஸ்லிம் என்று சொல்லி அறிமுகப்படுத்திக்கொண்டதால், எங்கே தான் முஸ்லிம் இல்லை என்று தெரிந்தால் காதலுக்கு பிரச்னை வரும் என்று கருதுகின்றனர். முஸ்லிம் பழக்கவழக்கங்களை தெரிந்து கொள்வதற்காக ஜெய் தனக்கு தெரிந்த முஸ்லிம் நண்பர் வீட்டில் அடிக்கடி சென்று வருகிறார்.

இந்நிலையில் இருவருக்கும் தங்கள் மதத்திலேயே வேறொருவரைப் பார்த்து மண முடிக்க நிச்சயம் செய்கிறார்கள் ஜெய், நஸ்ரியா குடும்பத்தினர். இதன் பிறகு ஜெய்யும், நஸ்ரியாவும் என்ன செய்கிறார்கள்? தாங்கள் இருவருமே ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பது தெரிந்ததா? இல்லையா? என்பதே திருமணம் எனும் நிக்காஹ். முதல்பாதியை விறுவிறுப்பாகவும், காமெடியாகவும் கதையை கொண்டு சென்ற இயக்குனர் அனீஸ், இருவருமே முஸ்லிம் இல்லை என்று தெரிந்தவுடன் எப்படி கதையை நகர்த்துவது என புரியாமல் தடுமாறியிருக்கிறார். இரண்டாம் பாதியின் வலுவற்ற திரைக்கதையும், சொதப்பலான க்ளைமாக்ஸும் படத்தின் மைனஸ்கள். ஜெய்க்கு வழக்கமான நேர்மை, உணர்ச்சிபூர்வ மற்றும் மென்மைத்தனம் மிக்க ஹீரோ ரோல்தான். நான் என்ன செய்ய? அடிக்கடி கண்ணுல வேர்க்கற கரக்டர்தான் கிடைக்குது எனும் அவரது ஆதங்கத்தை புரிந்து கொள்ள முடிகிறது. ஐயங்கார் வீட்டு பையனாக மனதில் ஒட்ட மறுக்கிறார்.

நஸ்ரியாவின் கேரக்டரும் அவரது காதலும் அழுத்தம் இல்லாமல் இருந்தாலும் நஸ்ரியாவின் ஒவ்வொரு செய்கையுமே பார்த்துக்கொண்டிருக்கலாம் போல அவ்வளவு க்யூட். ரயில் பயணியாக வரும் பாண்டியராஜனும், டிக்கெட் புரோக்கராக வரும் மயில்சாமியும் அந்த நேரத்துக்கு மட்டும் கலப்பூட்ட முயற்சித்திருக்கிறார்கள். லோகநாதனின் கமரா வேலைப்பாடு அம்சம். இந்து முஸ்லிம் காதல், இந்து-கிறிஸ்து காதல் என ஏகப்பட்ட மதம் சம்பந்தப்பட்ட காதல் கதைகளை தமிழ் சினிமா கண்டிருக்கிறது. ஆனால், இதிலிருந்து முற்றிலுமாக வேறு வகையான காதல் ஒன்றை தன் முதல் படத்திலேயே தமிழ் சினிமாவிற்கு அறிமுகம் செய்து வைத்து சபாஷ் வாங்குகிறார இயக்குநர் அனீஷ். ரொம்பவும் சென்சிட்டிவான ஒரு கதைக்களத்தைக் கையிலெடுத்து அதைப் பக்குவமாகக் கையாண்டிருக்கிறார். மொத்தத்தில் **திருமணம் எனும் நிக்காஹ்...**





# சினிமா



## 400 கோடி ஜீவனாம்சம் கேட்கும் நடிகரின் மனைவி!



திரையுலகத்தினரின் குடும்ப வாழ்க்கையில் சில மண முறிவுகள் எதிர்பாராமல் நடந்து விடுகின்றன. பல ஆண்டுகள் குடும்பம் நடத்தி, குழந்தைகள் பெற்ற பின் அந்த நட்சத்திர ஜோடிகள் விவாகரத்து செய்து அவர்களது ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. சமீபகாலத்தில் மலையாளத் திரையுலகில் திலீப்-மஞ்சுவாரியார் விவாகரத்தும், இந்தித் திரையுலகில் ஹிருத்திக் ரோஷன்-சுசானி விவாகரத்தும் அவரவர் ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. அதே சமயம், ஹிருத்திக் ரோஷனின் மனைவியான சுசானி அவரது கணவரிடமிருந்து 400 கோடி ரூபாய் சொத்துக்களை ஜீவனாம்சமாகக் கேட்பதாக பாலிவுட்டிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹிருத்திக் ரோஷனுக்கு சுமார் 1500 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் உள்ளதாம். மும்பை, பெங்களூர், சிங்கப்பூர் உட்பட பல இடங்களில் வீடுகளும் நிலங்களும்அவர்களுக்கு உள்ளதாம். அவற்றில் சிலவற்றை முக்கியமாகக் குறிப்பிட்டு சுசானி கேட்டுள்ளதாகவும் அவற்றைத் தர ஹிருத்திக் சம்மதித்துள்ளதாகவும் பேசிக் கொள்கிறார்கள்.

## மீண்டும் அப்பாவாகிறார் நடிகர் அஜீத்



நடிகர் அஜீத்குமாரின் மனைவி ஷாலினி, 6 வருடங்களுக்குப் பின் மீண்டும் கர்ப்பமாகி இருக்கிறார். இது, அவருக்கு இரண்டாவது குழந்தை ஆகும். அஜீத்குமார் ஷாலினி இருவரும் அமர்க்களம் என்ற படத்தில் முதன்முதலாக ஜோடி சேர்ந்து நடித்தார்கள். அப்போது இரண்டு பேருக்கும் இடையே காதல் மலர்ந்தது. பெற்றோர்கள் சம்மதத்துடன் இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள். கடந்த 2000ம் ஆண்டில், அவர்கள் திருமணம் நடந்தது. திருமணத்துக்குப்பின், ஷாலினி நடிக்கவில்லை. இருவரும் சென்னை திருவான்மியூரில் சொந்த வீடு கட்டி குடியேறினார்கள்.

அஜீத் ஷாலினி தம்பதிக்கு கடந்த 2008ம் ஆண்டில், பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு, அனோஷ்கா என்று பெயர் சூட்டினார்கள். அனோஷ்காவுக்கு இப்போது 6 வயது ஆகிறது. 6 வருடங்களுக்குப்பின், ஷாலினி மீண்டும் கர்ப்பமாகி இருக்கிறார். இப்போது அவர் 3 மாதம் கர்ப்பமாக இருக்கிறார். அவ்வப்போது அவர் டாக்டரிடம் சென்று மருத்துவ பரிசோதனை செய்து கொள்கிறார். தன்னுடன் விளையாடுவதற்கு ஒரு குட்டி பாப்பா வரப்போவதை அறிந்து அனோஷ்கா மகிழ்ச்சியுடன் காணப்படுகிறாள்.

# அந்த நாள் ஞாபகம்...




'சிம்மக் குரலோன்' சிவாஜி கணேசனுடன் 'சிலிர்க்கும் குரலோன்' சீர்காழி கோவிந்தராஜன்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் நீண்ட காலமாக ஆளணி பற்றாக்குறை

## அதிகாரிகள் பாராமுகமாக செயற்படுவதாக குற்றச்சாட்டு




வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் ஆளணி பற்றாக்குறை காரணமாக தமது கடமைகளை சரிவர செய்ய முடியாது அலுவலர்கள் திண்டாடி வருகின்றனர்.

அலுவலகத்தில் பல வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் அதனை நிரப்புவதற்கு இது வரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதனால் தற்போது கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அதிக வேலை பளுவால் மன உளைச்சலுக்குள் தள்ளப்படுவதாக அறியப் படுகின்றது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் 25 உத்தியோகத்தர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை 11 உத்தியோகத் தர்கள் மேற்கொள்வதனால அலுவலகத்தின் சேவைகளை திருப்திகரமாக வழங்க முடியாது அலுவலர்கள் திண்டாடுவதுடன் பல சிரமங்களை எதிர் கொள்ளுகின்றனர்.

இதனால் மன உளைச்சல் ஏற்படுகின்றது. இதன் காரணமாக சிறந்த சேவையினை வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடியாது அலுவலர்கள் திண்டாடி வருகின்றனர்.

அதுமட்டுமல்லாது ஒரு அலுவலரை பல கடமைகளை செய்ய வேண்டிய கட்டாய நிலை ஏற்படு கின்றது. வேலைகள் அதிகமாக காணப்படுவதுடன் அதனை சீரான முறையில் செய்வதற்கு ஆளணி பற்றாக் குறை காரணமாக அமைகின்றது. அலுவலகத்தில் கடமை புரியும் பெண் அலுவலர்கள் அதிகாலை 5 மணிக்கு கடமைக்கு சென்று இரவு 8 மணிக்கு கடமைகளைமுடித்து செல்வதனால் போக்குவரத்து முதலான பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

அலுவலகத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவை எடுத்து கூறியும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இனியாவது காலம் தாழ்த்தாது ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடப் பட்டுள்ளது. (6-250)

# நடைபாதை வியாபாரிகளால் சந்தை வியாபாரிகளுக்கு பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் வீதியோர நடைபாதை வியாபாரத்தினால் நகர சபைக்கு சொந்தமான சந்தை கட்டட தொகுதியில் வியாபாரம் செய்வோர் பெரும் இன்னல்களை எதிர்கொள் வதாகத் தெரிவித்தனர்.

வவுனியா நகரசபைக்கு சொந்தமான சந்தை கட்டட தொகுதிக்கு 500 மீற்றர் தொலைவிலே நடைபாதை வியாபாரம் இடம்பெறவேண்டும் என உள்ளூராட்சி சட்ட வர்த்தமானியில தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் சந்தையை சுற்றிவரவுள்ள வீதியோரங்களில் வியாபாரம் இடம்பெற்று வருகின்றமையால் வியாபாரிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக மரக்கறி வியாபாரிகளே இவ்வாறு அசௌகரிய நிலைக்கு உட்படுவதாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கடந்த காலங்களில் வியாபாரிகள் நகரசபையிடம் தெரிவித்தும் நடவடிக்கை எடுகக்கப்படாத நிலையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஆனாலும் இதற்கான நிரந்தர தீர்வினை நகரசபை பெற்றுத் தர வில்லை எனவும் வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தினமும் நகரசபைக்கு குத்தகைப்பணம் வழங்கிய போதிலும் வீதியோர வியாபாரிகளால் தமக்கு ஏற்படும் அசௌகரியங்களை நகர சபை கணக்கில் காணாதது போல் மௌனம் சாதிப்பது வேதனையளிப்பதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (6-250)

# இராணுவ சிப்பாய் கஞ்சாவுடன் கைது

வவுனியாவில் கஞ்சா பொதியுடன் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வசாவிளான் பிரதேசத்துள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுமுறையில் நிமித்தம் குறித்த இராணுவச் சிப்பாய் வவுனியா சென்றிருந்த போது வவுனியா பொது மலசலகூடப்பகுதியில்வைத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து ஒரு கிராம் 680 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6-250)

## தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு

முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலத்தின் மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளனர். கணித ஒலிம்பியாட் போட்டியில் முதலாம் பிரிவில் ப.சேதுராகவன் அகில இலங்கை ரீதியாக 11 மாணவர்களில் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ப.தனுஜா கவிதையாக்கம் மேற்பிரிவில் மாகாண ரீதியில் முதலாமிடத்தைப்பெற்றதோடு தேசிய மட்டப்போட்டியில் பங்குபற்றியுள்ளார். இ.தனுசோபன், க.பிரசாத் ஆகியோர் புத்தாக்கப் போட்டியில் மாகாண மட்ட ரீதியில் தெரிவுசெய்யப்பட்டுதேசிய மட்டப் போட்டிக்கு செல்லவுள்ளனர். (6)




# வடக்கில் 15 ஆயிரம் பேர் விசேட தேவையுடையோர்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வடமாகாணத்தில் விசேட தேவையுடையவர்களை இனங்கண்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகள் வடமாகாண சுகாதார அமைச்சினால் இம்மாதம் இறுதிக்குள் வழங்கப்படும் என வடமாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

யுத்த காலத்தின் பின்னர் வடமாகாணத்தில் பல்வேறு காரணங்களினால் விசேட தேவையுடையவர்களாக 15 ஆயிரம் பேர் இனங் காணப்பட்டுள்ளனர்.

மேலும் பலர் இன்னும் இனங் காணப்படாமல் இருக்கின்றார்கள். எனினும் அவர்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு இம்மாதம் இறுதிக்குள் அவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கான சேவைகள் வழங்க வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் வைகறை என்ற பெயரில் முள்ளந்தண்டு வடம் பாதிப்புக்குள்ளாகியவர்களுக்கு மீள வாழ்வு வழங்கப்பட்டு வருகின்றது. இங்கு 20 பேரை வைத்து பராமரிக்கும் வசதி காணப்படுகின்றது. எனினும் தற்போது 13 பேரே மறு வாழ்வு பெற்று வருகின்றனர்.

எனவே வடக்கு மாகாண அமைச்சர்கள் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து மக்களின் தேவையை கருத்தில் எடுத்து அவற்றை நிறைவேற்றுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (6-250)



வட மாகாண மீன் பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே திட்டமிடப்பட்ட அபிவிருத்தி பணிகளில் மன்னார் தனியார் பேருந்து நிலையம், பயணிகள் பேருந்து நிழற்குடை என்பன அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு திட்டமிடப்படி நிதி ஒதுக்கீடுகள் அமைச்சினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இவ் வேலைத்திட்டங்களை ஆரம் பிக்கும் முகமாக அவ்விடங்களை இட அனுமதி பெறும் பொருட்டும், அதன் கட்டுமானப்பணிகளிலுள்ள தொழில் நுட்ப விடயங்கள் தொடர்பாகவும் ஆராயுமுகமாக கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் அதிகாரிகள் பார்வையிட்டு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

# கிளி.திருநகர் பகுதியில் நீருக்கு அலையும் மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட திருநகர் கிராமத்தில் உள்ள மக்கள் கடும் வரட்சி காரணமாக குடி தண்ணீர் மற்றும் வேறு தேவைகளுக்கான தண்ணீரை பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்கியுள்ளனர்.

குறித்த கிராமத்தில் மீள்குடியமர்வின் பின்பு இந்தியன் வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இவ் வீட்டுத்திட்ட அத்திவாரத்தை வெட்டுவதற்கு இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் வரட்சியின் காரணமாக காய்ந்து போயுள்ள நிலத்தை வெட்ட இயலாத நிலையில் வீட்டுத் திட்டப் பயனாளிகள் உள்ளனர்.

மாக பாவனை குடிநீருக்காக தூரதேசம் செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் வீட்டுத்திட்ட வேலைகளுக்காக சிறிய உழவு இயந்திரம் மூலம் தண்ணீரைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இவ்வாறு வரட்சியின் மத்தியில் வாழும் தம்மை யார் கவனிப்பார்கள் என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே வரட்சியுடன் காணப்படும் இக்கிராமத்திற்கு தண்ணீரினை பெற்றுத் தருமாறு பொது மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-254)

# வவு.கடும் வரட்சி; மீனவர்களும் பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து நிலவும் வறட்சி காரணமாக நன்னீர் மீன்பிடிப்பாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக மழை இல்லாததால் குளங்கள் வற்றிப்போயுள்ளன.

இதனால் அவற்றில் வாழும் மீன்கள் பெருமளவில் இறந்துள்ளதாகவும் இதனால் தமது ஜீவனோபாயம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நன்னீர் மீன்பிடிப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சில குளங்களில் ஆங்காங்கே தேங்கி நிற்கும் நீரை நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் சேகரித்து அங்கு மீன்களை இட்டு வளர்க்கின்றனர்.

இவை தமது அன்றாட பயன்பாட்டிற்கு ஓரளவு பயன்பட்டு வருவதாக நன்னீர் மீன்பிடிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலை தொடரும் பட்சத்தில் மீன்கள் அனைத்தும் இறந்து போகக்கூடிய அபாயம் உருவாகுமென தெரிவிக்கும் நன்னீர் மீன்பிடிப்பாளர்கள் இதற்கு ஆவன செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுகின்றனர். (6-250)

# 4 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்; ஆட்டோ சாரதிக்கு விளக்கமறியல்

(குருமன்காடு)

வவுனியாவில் 4வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த ஆட்டோ சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 4 வயது சிறுமியை ஆட்டோசாரதி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக வவுனியா பொலிஸ் நிலையத்தின் பெண்கள், சிறுவர் பிரிவில் முறையிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஆட்டோ சாரதியை தேடிவந்த வவுனியா பொலிசார் குறித்த ஆட்டோ சாரதியை கடந்த புதன்கிழமை கைது செய்து, மறுநாள் வியாழக்கிழமை வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இதனையடுத்து சந்தேகநபர் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். (6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சாலையில் விபத்து; 65 பேர் உடல் கருகிப் பலி



(பீஜிங்)

சீனாவில் கிழக்கு பிராந்தியத்திலுள்ள தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 65 இற்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வெடி விபத்தில் 100 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

சீனாவில் கிழக்கு பிராந்தியமான ஜிங்குசு மாநிலத்தின் குன்சான் நகரில் உள்ள தொழிற்சாலையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கார் பாகங்களை உற்பத்தி செய்யும் குறித்த நிறுவனத்தில் 450 இற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணிபுரிவதுடன் வெடி விபத்து ஏற்பட்ட போது அப்பகுதியில் 200 தொழிலாளர்கள் இருந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (6)

# ஒரே நாளில் 55 பேர் பலி; காஸாவில் தொடரும் சோகம்



இஸ்ரேல் மற்றும் காஸாவிற்கிடையில் மோதல்கள் மீண்டும் தொடர்ந்து நேற்றையதினம் 55 பேர் பலியாகியுள்ளனர்.

72 மணித்தியாலங்களுக்கு போர் நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் உடன்படிக்கை மீறப்பட்டதாக கூறி இரு தரப்பினரும் மீண்டும் மோதல்களை ஆரம்பித்துள்ளனர்.

இந்த மோதலில் நேற்று முன்தினம் மாத்திரம் 53 பேர் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் காணாமற் போன தமது இராணுவ வீரரை தேடும் பணிகள் தோல்வியடைந்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

5 வருடகாலம் சேவையாற்றிய இராணுவ வீரர் போர் நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்ட சில மணி நேரங்களில் காணாமற்போயுள்ளார்.

ஹமாஸ் இயக்கத்தினர் இவரை கடத்தியிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி இந்த சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஹமாஸ் இயக்கத்தினர் இந்த கடத்தல் சம்பவத்தை மேற்கொண்டிருந்தால் விரைவில் குறித்த இராணுவ வீரரை விடுவிக்குமாறு பராக் ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பில் ஹமாஸ் இதுவரையில் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. (6)



அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி, பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தபோது...

# உலக வர்த்தக ஒப்பந்தம் தோல்வி; இந்தியா மீது அமெரிக்கா சீற்றம்

(வோஷிங்டன்)

உலக வர்த்தக அமைப்பின், வர்த்தக ஏற்பாடு ஒப்பந்தம் ஏற்படாமல் போனதற்கு, இந்தியா மற்றும் சில நாடுகள்தான் காரணம் என அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உலக வர்த்தக அமைப்பு உள்ளது. இதில் அங்கமாக உள்ள நாடுகளுக்கு இடையே, வர்த்தக ஏற்பாடு ஒப்பந்தம் ஏற்பட இருந்தது. இதற்காக கடந்த ஆண்டு, இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்ற, முந்தைய, மன்மோகன் சிங் அரசின் அமைச்சர் மற்றும் பிரதிநிதிகள், அமெரிக்கா தெரிவித்த அம்சங்களை ஏற்றுக் கொண்டதாக கூறப்படுகிறது. ஆனால், இப்போதைய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசின் பிரதிநிதிகள், பாலி மாநாட்டு ஒப்புதலை ஏற்க மறுத்து, இந்தியாவின் உணவு தேவை, உணவு பாதுகாப்புக்கு ஏற்ப சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியது.

இதில் இந்தியாவுடன் அவுஸ்திரேலியா போன்ற பல நாடுகளும் இணைந்துள்ளதால், ஒருமித்த கருத்தில், வர்த்தக ஏற்பாடு ஒப்பந்தம் ஏற்படுத்த முடியாமல், அதற்கான முயற்சி நேற்று தோல்வி அடைந்தது. இதற்கு இந்தியாவும், சில நாடுகளும்தான் காரணம் என, அமெரிக்கா நேற்று குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து, அமெரிக்க வர்த்தக துறையின் பிரதிநிதி, மைக் புரோமேன் நேற்று கூறுகையில்,

பாலி தீர்மானத்தை ஏற்ற இந்தியா, இப்போது பின்வாங்கியதால் தான் பிரச்சினை. இதனால், வர்த்தக ஏற்பாடு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட முடியவில்லை என்றார். (6)

# ஒரு வயதுக் குழந்தையை தாக்கிய கணவனும் தடுக்காத மனைவியும் கைது

தனது ஒருமாத குழந்தையை தாக்கி அந்த குழந்தை காயங்களுடன் காணப்படும் புகைப்படத்தினை பேஸ்புக்கில் பிரசுரித்த பிரான்ஸை சேர்ந்த தந்தை ஒருவர் மீது துஷ்பிரயோக குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேடிக்கைக்காக தான் இந்த செயலை செய்துள்ளதாக அவர் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

இந்த புகைப்படத்தினை சமூக இணையத்தளத்தில் பார்வையிட்ட அவரது நண்பர் பொலிஸாரிடம் இதனை கூறியுள்ளார்.

இதனை தொடர்ந்து பொலிஸார் குழந்தையின் பெற்றோரை கைது செய்துள்ளனர்.

தனது கணவர் குற்றம் செய்வதை அறிந்த நிலையிலும் அது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்க தவறிய குற்றத்திற்காக குழந்தையின் தாயும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தை பொலிஸாருக்கு தெரியப்படுத்தினால் தனது கணவர் தன்னை விட்டு விலக்கி விடுவார் என்ற காரணத்தினால் அது தொடர்பாக பொலிஸாரிடம் முறையிடவில்லை என மனைவி தெரிவித்துள்ளார். (6)

# 15 வருட சிறைக்கு பேஸ்புக் காரணம்

பேஸ்புக்கில் மன்னராட்சி பற்றி விமர்சித்தமைக்காக, தாய்லாந்து பாடகர் ஒருவருக்கு 15 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து மன்னராட்சியே நடைபெற்று வருகிறது. அந்நாட்டு சட்டப்படி மன்னரையோ அவரது குடும்பத்தினரையோ அவமதித்தால் 15 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்படும்.

இந்நிலையில், தாய்லாந்து பாடகர் ஒருவர் 2010, 2011ஆம் ஆண்டுகளில் மன்னராட்சியை விமர்சித்து தமது பேஸ்புக் பக்கத்தில் கருத்துகளை வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் தொடரப்பட்ட வழக்கில், குறித்த பாடகருக்கு மன்னராட்சியை அவமதித்ததற்காக 15 ஆண்டுகாலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (6)

# சோனியா - ராகுல் ஓய்வெடுக்கட்டும் காங்கிரஸுக்கு அதனால் பாதிப்பில்லை



(புதுடில்லி)

சோனியாவும், 'ராகுலும் ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும் எனவும், அதனால் கட்சிக்கு எந்த பாதிப்பும் ஏற்பட்டு விடாது எனவும் பஞ்சாப் காங்கிரஸ் காரிய கமிட்டியின் முன்னாள் உறுப்பினர் ஜக்மித் சிங் பிரார் தெரிவித்துள்ள கருத்து காங்கிரஸ் கட்சிக்குள் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

பஞ்சாப் காங்கிரஸ் காரிய கமிட்டியின் முன்னாள் உறுப்பினரான ஜக்சித் சிங் பிரார் தனியார் டிவி ஒன்றிற்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர், லோக்சபா தேர்தலில் பெற்ற தோல்வியில் இருந்து மீண்டு வருவதற்கு காங்கிரஸ் தலைவர் சோனியாவும், துணைத் தலைவர் ராகுலும் 2 ஆண்டுகள் ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும். அதனால் கட்சிக்கு எந்த பாதிப்பும் ஏற்பட்டு விடாது. காங்கிரஸ் கட்சி தற்போது மிக மோசமான நிலையில் உள்ளது. அதனை சரிசெய்ய கட்சியை சீரமைக்க வேண்டியது அவசியம். சமீபத்திய தேர்தல்களில் பெற்ற தோல்விக்கு பொறுப்பேற்று காங்கிரஸ் கட்சியின் அனைத்து பொதுச் செயலாளர்களும் தங்கள் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.

புதிய நிர்வாக குழுவிடம் கட்சி ஒப்படைக்கப்பட வேண்டும். காந்திய வழியை கடைப்பிடிப்பவர்களை கட்சிக்கு திரும்ப கொண்டு வர வேண்டும். சில தலைவர்கள் மட்டும் கட்சியை வழி நடத்தும் நிலையை மாற்ற வேண்டும். கட்சிக்கு ஆலோசனை வழங்குபவர்கள், கட்சி தொண்டர்கள் தலைமை எடுக்கும் முடிவுகளில் தலையிடக் கூடாது என கருதுகின்றனர்.

அவ்வாறு தலையிடுபவர்கள் கட்சியில் இருந்து உடனடியாக நீக்கப்படு கின்றனர். லோக்சபாவில் பெற்ற தோல்விக்கு சோனியாவும், ராகுலும் மட்டும் பொறுப்பல்ல. ஆனால் அவர்களும் தான் பொறுப்பு. இதற்கு அனைவரும் தான் பொறுப்பு. நான் சொல்ல வருவது என்னவென்றால், வெகுகாலமாக கட்சியின் தலைமை பொறுப்பை நிர்வகித்து விட்ட சோனியாவும், ராகுலும் ஒரு 2 ஆண்டுகள் ஓய்வு எடுத்துக் கொள்வதால் கட்சிக்கு தீங்கு ஏதும் நேர்ந்து விடாது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


வெகுகாலமாக காங்கிரஸ் கட்சியின் தலைமை பொறுப்பில் இருந்து விட்டதால் காந்திகள், தலைமை பொறுப்பில் இருந்து விலக வேண்டும் என காங்கிரஸ் கட்சிக்குள் முதலில் குரல் எழுப்பியவர் பிரார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இவ்வாறு தெரிவித்துள்ளது கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. (6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அருட்தந்தை கொன்சலஸ் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## மன்னார் பள்ளிமுனை சம்பியன்







**வலைப்பாடு புனித அன்னாள் ஆலய பெருவிழாவை முன்னிட்டு அருட்தந்தை கொன்சலஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட போட்டியில் மன்னார் பள்ளிமுனை அணி சம்பியனாகியது.**

வலைப்பாடு புனித அன்னாள் ஆலய பெருவிழாவை முன்னிட்டு ஆலய நிர்வாகத்தினரும் பூநகரி காற்பந்தாட்ட உப லீக்கும் இணைந்து ஏற்பாடு செய்த மறைந்த அருட்தந்தை கொன்சலஸ் அடிகளார் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி கிளிநொச்சி மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த அழைக்கப்பட்ட 20 அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

மாவட்டங்களின் முதன்மை அணிகளை இணைத்து நடத்திய அழைப்புச் சுற்றுப்போட்டி கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்ற நிலையில், மன்னார் பள்ளிமுனை சென்லூசியஸ் அணியும் மன்னார் சாவற்காடு கில்லறி விளையாட்டுக்கழக அணியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகின.

இவ் இறுதிச்சுற்றில் மன்னார் பள்ளிமுனை சென்லூசியஸ அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கொன்சலஸ் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

இவ் இறுதி சுற்றுப்போட்டியின் முதன்மை விருந்தினராக ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசில்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் அருட்தந்தை அருட்திரு சில்வஸ்ரர்தாஸ் மற்றும் ஈ.பி.டி.பி வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் உபதலைவர் அன்ரன் அன்பழகன், கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் நிமலதாசன் மற்றும் பூநகரி உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவர் ராஜ்குமார் ஆகியோரும் வலைப்பாடு இரணைதீவு பிரதேசங்களைச் சேர்ந்த உதைபந்தாட்ட ரசிகர்கள், ஆர்வலர்கள் என பெரும் திரளானவர்கள் கலந்துகொண்டனர். (க)

## மழலைகளின் விளையாட்டு விழாக்கள்

எவர்சைன் கிட்ஸ் வேல்ட் 9 ஆவது வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் எவர் சைன் கிட்ஸ் வேல்ட் இயக்குனர் சிவனருட் சீலர்.செ.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.ஜெ.இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (க)

---

புத்தூர் கிழக்கு சரஸ்வதி சனசமூக நிலைய முன்பள்ளி மழலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புத்தூர் கிழக்கு சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் தலைவர் சி.தவநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும் வலி வடக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவருமான இராமநாதன் ஐங்கரனும் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் ஜெயசிங்கவும் புத்தூர் கிழக்கு கிராம சேவகர் வி.கோபாலதாசும் கலந்துகொள்ளவுள்ளனர். (க-134)

## மருதங்கேணி கணேசானந்தவை வீழ்த்தி சம்பியனாகியது உடுத்துறை பாரதி அணி

சுவிஸ் லேபர் அசிஷ்ரன்ஸ் வழிகாட்டலில் வத்திராயன் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் நடத்திய காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம் அணி சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டியில் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த கழகங்களின் காற்பந்தாட்ட அணிகள் பங்குபற்றியிருந்தன.

போட்டிகள் விலகல் முறையில் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வந்தது. தொடர்ந்து, இறுதிப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் உடுத்துறை பாரதி அணியை எதிர்த்து மருதங்கேணி கணேசானந்த அணி மோதியது.

போட்டி நேரத்தில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறவில்லை. இதனையடுத்து வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதையில் உடுத்துறை பாரதி விளையாட்டு கழக அணி, 4:3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இச்சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக உடுத்துறை பாரதி அணியின் செல்வராஜா ஜெகமோகனும், சிறந்த கோல் காப்பாளராக மருதங்கேணி கணேசானந்த அணியின் தனபாலசிங்கம் றிஷானும் தெரிவு செய்யப்பட்டனர்.

இச்சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற அணிகள் மற்றும் சிறந்த வர்ரகளுக்கான பரிசில்களை மருதங்கேணி பிரதேச செயலாளர் எஸ்.லிங்கநாதன் வழங்கினார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## அண்டர்சன் - ஜடேஜா மோதலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது ஐ.சி.சி.



அண்மையில் இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கும், இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் ஆண்டர்சனுக்கும் இடையே திடீரென மோதல் ஏற்பட்டது.

உணவு இடைவேளையில் பெவிலியனை நோக்கி திரும்பிய போது, ஜடேஜாவை வம்புக்கு இழுத்த ஆண்டர்சன் அவரை திட்டி தீர்த்ததுடன் தள்ளிவிட்டு அவமதித்ததாக இந்திய அணித்தலைவர் டோனி குற்றம் சாட்டினார்.

இதையடுத்து ஆண்டர்சன் மீது நடத்தை விதி லெவல்-3ஐ மீறியதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் இந்தியா புகார் செய்தது. பதிலுக்கு, ஜடேஜா ஆண்டர்சனை மிரட்டும் வகையில் நடந்து கொண்டதாக இங்கிலாந்து தரப்பு குற்றம் சுமத்தியது.

ஜடேஜா மீதான புகாரில் போட்டி நடுவர் டேவிட் பூன் ஜடேஜாவுக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 50 சதவீதத்தை அபராதமாக விதித்தார். இதை எதிர்த்து இந்திய அணி நிர்வாகம் முறையீடு செய்தது.

இந்த நிலையில் ஆண்டர்சன் மீதான புகார் மற்றும் ஜடேஜாவின் அப்பீல் குறித்து ஐ.சி.சியால் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரி கார்டன் லீவிஸ் விசாரணை நடத்தினார்.


விசாரணையின் போது இந்திய வீரர்கள் தங்கள் தரப்பு நியாயத்தை முன் வைத்ததுடன், சில ஆதாரங்களையும் சமர்ப்பித்தனர்.

ஜடேஜா, ஆண்டர்சன் இருவர் மீதும் தவறில்லை என்று விசாரணை அதிகாரி கார்டன் லீவிஸ் அறிவித்து, இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இதன் மூலம் ஜடேஜாவுக்கு விதிக்கப்பட்ட அபராதமும் இரத்து செய்யப்பட்டது.

ஆண்டர்சன் குற்றவாளி என்று உறுதி செய்யப்பட்டால், அவருக்கு 2 முதல் 4 டெஸ்ட் வரை விளையாட தடை விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சம்பவம் நடந்த வீரர்களின் அறையின் வெளிப்பகுதியில் பொருத்தப்பட்ட கமரா அந்த சமயத்தில் அணைத்து வைக்கப்பட்டிருந்ததாக அதற்கு பொறுப்பானவர்கள் பல்டி அடித்தனர். போதிய ஆதாரம் இல்லாததால் ஆண்டர்சன் தண்டனையிலிருந்து தப்பி இருக்கிறார்.

ஐ.சி.சியின் இந்த தீர்ப்பால் இந்திய அணியினர் அதிருப்தி அடைந்துள்ளனர். (க)

## தரவரிசையில் தடுமாறும் இந்திய அணி வீரர்கள்





இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் மோசமான ஆட்டம் காரணமாக கோலி, புஜாரா தரவரிசையில் பின்னடைவு கண்டுள்ளனர்.

டெஸ்ட் தரவரிசையில் தென் ஆப்பிரிக்காவின் ஏபி டி வில்லியர்ஸ் 899 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்திலும், சங்கக்காரா 889 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளனர். ஆம்லா 878 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

8 ஆவது இடத்திலிருந்த புஜாரா 10 ஆவது இடத்திற்கும், விராட் கோலி 15 ஆவது இடத்திற்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

சவுத்தாம்ப்டனில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடிய ரஹானே 9 இடங்கள் முன்னேறி 26 ஆவது இடத்திற்கு வந்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய சாதனைகள் சாதிக்கப்படுவது வலிமையினால்அல்ல.
விடாமுயற்சியினால் -எடிசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கணிதத்தில் சித்தியடையாவிட்டாலும் உயர்தரப் பரீட்சைக்கு அனுமதிக்க வேண்டும்

எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு

என்பது வள்ளுவனின் முடிபு. எண்ணும் எழுத்தும் நம் இரு கண்கள் என்று கூறுவதன் ஊடாக எண், எழுத்து என்பவற்றின் முக்கியத்துவத்தை நம் தெய்வப் புலவன் உலகிற்கு எடுத்துரைக்கிறான்.

மொழியும் கணித அறிவும் உள்ளவர்களின் கிரகித்தல் மற்றும் சமயோசித அறிவு என்பது அபாரிதமானது.

எனவே, ஒரு பிள்ளையின் கற்றல் செயற்பாட்டில் இந்த இரண்டும் அவசியப்படுகின்றன. பொதுவில் எழுத்து, கணிதம் என்பவற்றில் தேர்ச்சி அடைகின்ற பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் ஒரு ஏற்றமான பாதை இருப்பதைக் காணமுடியும்.

எனினும் இன்றைய சமகால சூழ்நிலையில் தாய்மொழித் தேர்ச்சியிலும் கணிதத்திலும் மாணவர்கள் பலர் பலவீனமாக இருப்பதை காண முடிகின்றது.

அதிலும் குறிப்பாக கணித பாடத்தின் பெறுபேறுகள் மிகவும் கவலைக்குரியனவாக இருப்பதன் காரணமாக உயர்தரத்தில் கற்பது என்பது தடைப்பட்டுப் போகின்றது.

எத்தனையோ மாணவர்களிடம் பல்வகைத்திறமைகள் இருக்கின்ற போதிலும் கணித பாடத்தில் சித்தியில்லை என்பதன் காரணமாக அவர்கள் தொடர்ந்து உயர்தரக் கல்வியை மேற்கொள்ள முடியாமல் போகின்றது.

இதன் காரணமாக அவர்களின் எதிர்காலம் திசை திருப்பப்பட்டு விடுகின்றது. இதுதவிர முன்பெல்லாம் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி அடையாத மாணவர்கள் தொடர்ந்தும் இரண்டாவது தடவையாகக் கற்பதற்கும் பாடசாலைப் பரீட்சைத் திணைக்களப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குமான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த முறைமை இப்போதும் அமுலில் இருக்க வேண்டியதாக இருந்த போதிலும் பாடசாலைகள் பல அந்தச் சந்தர்ப்பத்தை மாணவர்களுக்கு வழங்காமல் கைவிட்டுள்ளன.

இலங்கையின் வரலாற்றை ஒரு கணம் எடுத்து ஆராய்ந்தால் க.பொ.த சாதாரண தரத்தில் இரண்டாவது தடவையாக தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் பின்னாளில் நிர்வாகத்திறன் மிக்கவர்களாக இருந்துள்ளனர்.

எனவே, மாணவர்களுக்கான சந்தர்ப்பங்களை பாடசாலைகள் புறந்தள்ளி விடுவதானது மாணவர்களுக்குச் செய்கின்ற மிகப்பெரும் கொடுமைத்தனமாகும்.

இப்போது கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களும் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்க முடியும் என்ற அறிவித்தலை கல்வி அமைச்சர் விடுத்துள்ளார்.

எனினும் இரண்டு வருடங்களுக்குள் கணித பாடத்தில் சித்தியடைய வேண்டும் என்பது நிபந்தனையாக உள்ளது. கணித பாடத்தில் சித்தியடையத் தவறினால் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றமுடியாதென்ற நிபந்தனை இறுக்கமானதாகவே கருதப்பட வேண்டும்.

இரண்டு ஆண்டுகள் க.பொ.த உயர்தரத்தில் பாடங்களைக் கற்றுக்கொள்ளும் அதேநேரம் கணித பாடத்திலும் தோற்றி சித்தியடைவதென்பது மாணவர்களுக்கு பாரம் மிகுந்ததாக இருக்கும்.

இதற்கு அப்பால், இரண்டு வருடங்கள் க.பொ.த உயர்தரத்தில் கற்றுக்கொள்ளும் காலப்பகுதியில் குறித்த மாணவன்— கணித பாடத்தில் சித்தியடையவில்லை எனும் போது, அதனால் அந்த மாணவன் சந்திக்கக் கூடிய உளத்தாக்கம் பாரதூரமானதாக இருக்கும்.

எனவே, கணித பாடத்தில் சித்தியடையாவிட்டாலும், உயர்தரத்தில் கற்கவும் பரீட்சைக்குத் தோற்றவும் அனுமதித்தல் என்ற தீர்மானமே பொருத்தமானதாகும்.

இத்தகைய தீர்மானம் வீதிக்கு வரக்கூடிய மாணவர்களையும் கற்கத் தூண்டுவதாக அமையும் என்பது நம் சிற்றறிவின் சிந்தனை.

## மாணவர்களுக்கான பரீட்சை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான வெற்றித் தேர்வு வெளியீட்டகத்தின் மாபெரும் கருத்தரங்கு யாழ்ப்பாணம் மற்றும் வடமராட்சிப் பகுதியிலும் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய யாழ்.நகரில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்திலும் வடமராட்சிப் பகுதியில் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை மாலுசந்தி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது.

முற்றிலும் எதிர்பார்த்த வினாக்களை கொண்ட மாதிரி வினாப்பத்திரப் பரீட்சையாக நடத்தப்பட்டு மதிப்பீடு செய்து பல்லூடகத்தின் மூலம் விரிவான விளக்கங்களுடன் தெரிவுபடுத்தப்பட்டு பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெறுபவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படும்.

இதற்கான நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் அனுமதிக் கட்டணமாக 150 ரூபாய் அறவிடப்படும். (6)

## மெய்வல்லுநர் விழா

(யாழ்ப்பாணம்)

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 29-வது மெய்வல்லுநர் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பொற்பதி அறிவாலயத்தில் நல்லூர் பிரதேச சபை உப தலைவியும் சரஸ்வதி முன்பள்ளி தலைவியுமான திருமதி கோமதி ரவிதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் சண் வாமதேவனும் மன்றும் விருந்தினர்களும் கலந்து கொள்ளவுள்ளானர்

## ஆடிப்பூரம்

(யாழ்ப்பாணம்)


சுயம்பு மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் ஆடிப்பூர நிகழ்வானது இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய முன்றலில் ஆரம்பமாகி சட்டநாதர் சிவன்கோவில் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நிறைவு பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கஞ்சி வார்த்தல், சுயம்புக்கு பக்தர்கள் தாமே பால் அபிஷேகம் செய்தல், அன்னை அங்கப்பிரதட் சணம் வருதல் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

## மணிவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையின் மணி விழா எதிர்வரும் 16-ம் திகதி சனிக்கிழமை கலாசாலையில் இடம்பெறவுள்ளது. இவ் விழா ஏற்பாடுகள் தொடர்பில் அதிபரின் பழைய மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருகை தருமாறு மணிவிழாக் குழுவினர் கோரியுள்ளனர்.

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### எங்கள் குருநாதன்

வாசியோகந் தேரென்றா னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள் குருநாதன்
கங்குல்பக லில்லையென்றா னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோக்கென்றா னெங்கள்குரு நாதன்
நடனந்தெ ரியுமென்றா னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றோ னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றோ னெங்கள்குரு நாதன்

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**03.08.2014 இற்கான வினா**

**பிரமச்சரிய நிலையின் சிறப்புக்கள் எவை?**

**02.08.2014 ற்குரிய கேள்வியும் விடையும்**

**இந்து மக்கள் வாழ்வியலில் உள்ள நான்கு நிலைகள் (ஆச்சிரமங்கள்) எவை?**

**பிரமச்சரியம் (மாணவ நிலை), கிருகஸ்தம் (இல்லற நிலை) வானப்பிரஸ்தம் (துறவு நிலைக்கு ஆயத்தமாத நிலை), சந்நியாசம் (துறவுநிலை)**

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

## "அன்பிலிருந்து தோன்றுகின்ற பரிவு எம் உள்ளத்திலிருந்தும் உருவாகட்டும்"


இன்று எமக்குத் தரப்படும் பைபிள் பகுதியில் களைத்தவர்களாக பசியுடனிருந்து தமது போதனைகளை கேட்டுக் கொண்டிருந்த மக்களை கண்ணுற்ற இயேசு, தமது சீடர்களிடம் "மக்களை பந்தி அமரச் செய்யுங்கள்" என்றார். அப்பகுதி முழுவதும் புல்தரையாய் இருந்தது. அமர்ந்திருந்த ஆண்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம். இயேசு அப்பங்களை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார். அவ்வாறே மீன்களையும் பகிர்ந்தளித்தார். அவர்களுக்கு வேண்டிய மட்டும் கிடைத்தது. அவர்கள் வயிறார உண்ட பின், "ஒன்றும் வீணாகாதபடி, எஞ்சிய துண்டுகளைச் சேர்த்து வையுங்கள்" என்று தம் சீடரிடம் கூறினார். மக்கள்

### பரமபிதா காட்டிய பாதை

உண்டபின் ஐந்து வாற் கோதுமை அப்பங்களிலிருந்து எஞ்சிய துண்டுகளைச் சேகரித்த சீடர்கள் பன்னிரண்டு கூடைகளில் அவற்றை நிரப்பினார்கள் என்று கூறப்படுகிறது.

மக்க்ளுக்கு இறையாட்சி பற்றிய நற்செய்தியை அறிவித்து, அவர்கள் மனம் மாற வேண்டும் என்று இயேசு அழைப்பு விடுத்த காலகட்டம் .அது. கடவுளின் ஆட்சி மக்களிடையே வந்து கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் கண் கூடாகக் காணும் விதத்தில் இயேசு பல அதிசய செயல்களையும் புரிந்தார். அச்செயல்கள் வழியாக மக்களுக்கு பல நன்மைகள் ஏற்பட்டன. இத்தகைய அரும் செயல்களில் ஒன்று மேற்படி "ஐயாயிரம் பேருக்கு உணவளித்த சம்பவம் ஆகும்" மக்களுக்கு இயேசு உணவளித்த இந்நிகழ்வை நாம் பல கோணங்களிலிருந்து பார்க்கலாம். எகிப்திய அடிமைத் தனதத்லிருந்து விடுவிக்கப்பட்டு மோசேயினால் வழி நடத்தப்பட்டு வந்த இஸ்ரயேல் மக்களுக்குக் கடவுள் பாலைநிலத்தில் "மன்னா" என்னும் உணவை அளித்ததுபோல இங்கு இயேசு பசியுற்றோருக்கு உணவளித்துப் பாதுகாக்கின்றார். எலியா, எலிசா போன்ற இறைவாக்கினர் மக்களுக்கு உணவு வழங்கியது போல இங்கும் இயேசு செயற்படுகின்றார். மேலும் இதற்கு எடுத்துக்காட்டாக நற்கருணையை இயேசு ஓர் ஆன்மீக உணவாக ஏற்படுத்தியதும் இங்கே குறித்துக் காட்டப்படுகிறது.

இந்த நிகழ்வில் ஓர் ஆழ்ந்த உண்மையை நாம் காண்கிறோம். அதாவது, மக்களுக்கு உணவளிக்க இயேசு வழிவகுத்துவிட்டு, உணவைப் பகிர்ந்தளிக்கின்ற பணியைத் தம் சீடரிடமே விட்டுவிடுகின்றார். யார் இந்த சீடர்கள்? இயேசுவின் காலத்தில் அவரைப் பின்சென்றவர்கள்தாம் அவர்கள். இன்று நாம் அவருடைய சீடர்களாக இருக்கின்றோம். இயேசுவின் குரலைக் கேட்டு, அவருடைய போதனையை ஏற்று, இயேசுவின் வழியில் நடந்து செல்ல முன்வரும்போது நாம் இயேசுவின் சீடர்களாக மாறுகிறோம். நமக்கு இயேசு வழங்குகின்ற கட்டளை என்ன? "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்". இந்த உணவு எத்தகையது? பிறரது புறப்பசியை ஆற்றுகின்ற உணவு மட்டுமா? இல்லை. ஆன்மீகப் பசியை ஆற்றவும் சீடர்கள் துணை செய்ய வேண்டும். இயேசுவின போதனையை ஏறறு, அதன்படி வாழந்து,



இயேசுவுக்குச் சான்று பகரும் நம் வாழ்வும பிறருடைய பசியை ஆற்றுகின்ற உணவாக மாறும். அப்போது. இயேசு தம்மையே நமக்கு உணவாக அளித்தது போல நாமும் பிறருக்கு உணவாக நம்மையே கையளிப்போம். அதாவது, நம்முடைய சான்று வாழ்க்கையைக் கண்டு பிறர் தம் ஆன்மீகப் பசி ஆறுகின்ற அனுபவம் பெறுவர். பிறருடைய நலனை முன்னேற்றுவதில் இயேசுவின் பணியை ஆற்றிடத் திருச்சபை முழுவதுமே அழைக்கப்பட்டுள்ளது. திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும், தம்மைப் பின்செல்கின்ற எல்லா மனிதருக்கும் இயேசு வழங்குகின்ற கட்டளை:

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

"நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" இக்கட்டளையை ஏற்றுச் செயற்படுத்துவது நம் கடமை. நாம் தயாரா?

மக்கள் பெருந்திரளாக வந்து தம்மை அணுகியதைக் கண்ட இயேசு அவர்கள் மீது பரிவுகொண்டார். அன்பிலிருந்து தோன்றுகின்ற பரிவு தான் இயேசுவின் உள்ளத்திலிருந்து எழுந்த பாச உணர்வு, அவர் மக்களிடத்தில் கொண்டிருந்த அக்கறை. திருமகன் இயேசுவிடம் விளங்கிய பரிவு எங்கள் வாழ்விலும் துலங்கிட நாம் அவரோடு பயணிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## சகுனி ஆட்டம்

வீரம் விளைந்த தமிழ் மரபு
மாற்றி அமைக்க மன்னவன் இல்லை
சோழனை சோடை ஆக்கி
பாண்டியனின் படை சேர்த்து
சேரனும் சேர்ந்து வர
நேற்றைய வரலாறு
சேற்றில் புதைந்து விட்டோம்
கணித சேர்க்கைகளின்
விடைகாண் பயணத்தில்
மீகாமனாய் வழி நடத்த முடிகிறது
அகச்சிவப்பு கதிர்களில்
இலத்திரன் தூண்டுகையால்
இரவுப்பார்வையை கண்ட தமிழனால்
சர்வதேசத்தின் சதித்திட்டங்களை
அகத்துறிஞ்சும் சாதுர்யம்
சற்று எட்டா கனியே- இன்றுவரை
வீரத்தை கையில் ஏந்தாமல்
விவேகம் கொண்டு
சதுரங்கத்தில் ஆடுவோம்
சகுனி ஆட்டம்
வெற்றி கிட்டும் வரை

இனியாள் பேராசிரியன்
திருகோணமலை

## சுவர்க்க வாசல்

காஸா மக்களும் மலேசியா மக்களும்
இந்த உலகத்தின் முஸ்லிம் மக்களும்
தீவிரவாதிகளுக்கு தோச
விருந்தாயிற்று
இஸ்ரேலா? ஈராக்கா? இல்லை
அமெரிக்காவா யார்தான்
இந்த
மக்களை சுவைத்து சுகம் காண்பது
இறைவா உயிரிழக்கும்
அப்பாவி
ஜீவன்களுக்கு சுவர்க்க
வாசற்கதவினை
திறந்து வைத்து விடுவாயாக
கெஞ்சிக் கேட்கிறேன்

சி.எக்சனா
புங்குடுதீவு

## வாளோடு வாழ்வோடு

கல்லும் மண்ணும் தோன்றும் முன்னம்
வாளோடு தோன்றிய மூத்த குடிகள்
வள்ளுவன் முப்பால் வாய்மை வழியில்
செம்மை வாழ்வில் மகிழ்ந்து சிறந்தனர்
காலம் கோலம் கொள்கையில் மாறி
வாள்வீச்சிலே வார்த்தையாடினர்
நிலத்தடி இரத்த வங்கியில்
நிரம்பிய கையிருப்பு எப்போதும்
பண்பட்ட வாழ்க்கை புண்பட்டு
ஆபத்து நிலையில் அவசர சிகிச்சைக்காக
தேறித்தெளிய தெய்வம் பிரார்த்தனை
மாற்றம் வரும் மனதார நம்புவோம்

சு.சிவராசா, நாவற்குழி

## மடல்

என் உயிர்த் தோழியே!
நட்புக்கு எல்லையில்லை—நாம்
பழகிய நாட்களுக்கு பஞ்சமில்லை
பழகிப் பிரிந்து போகிறேன்
என்னன்பை மறந்திடாதே...!
காலம் போடும் கோலங்கள்
கண்ணீர் சிந்தும் கவிதைகள்
சோகமேயான சங்கீதங்கள்
நிழலான என் வாழ்வு
நிஜமற்றுப் போய்விட்டது
மீண்டுமோர் பிறப்பெடுத்து
பள்ளித் தோழனாய்ப்
பாடம்படிப்போம்

கிரு.செந்தூரன்
நிதர்சன் கிறீம் ஹவுஸ்

## இமயம் தொட...

எண்ணம் உயர்வாய் வை
எதிலும் வை நம்பிக்கை
தருணம் அறிந்து செய்
தரணி வெல்லும் மெய்
காயம் என்பது பொய்
இறை அன்புதான் உண் மை
காலங்களில் முதல் தை
உன்னை உயர்த்தும் எழுகை

மாவை. நா. கஜேந்திரன்

## பணம்

ஓரெழுத்து வித்தியாசம்
ஆனால் ஒன்றுதான்
பணப்பித்தர்கள் பலர்
பிணமாய்ப் போன கதை
இன்றும் இருக்கிறது
ஊர்வாயை மூடும்
உலகவாயைப் பெரிதாக்கும்
எவனும் வரும்போது
கொண்டுவருவதில்லை
போகும்போது
கொண்டு போவதில்லை
பணத்தாசையால்
பலர் ஓசையில்லாமல்
போவது பிணமாய்..

பு.பிரதீபா, நல்லூர்

# மௌனத்தின் தேடல்-215



## விழுங்கப்பட்ட கல்வி

வறுமையின் வாசல் திறந்ததே
வாசிக்கும் வயதினிலே
யாசிக்கும் அவலம் அளித்ததே!
பாசத்தின் ஊற்று சுரந்ததே
குட்டிப் பாப்பாவோடு முட்டிப் போத்தலையும்
சுமக்க வைத்ததே
புத்தகங்கள் சுமக்க
வேண்டிய கரங்களை!

சோ. சிவகுமாரன்
வவுனியா

## முடிவு

முன்னைய போரில் தந்தை...!
முள்ளிவாய்க்காலில் தாய்...!
வதைமுகாமில் உடன் பிறப்புக்கள்...!
நாளை நீயும் எனில்!!!
இயந்திரத்தை தவிர- எனக்கு
வேறு வழியில்லை

அப்துல்லா
கிளி.கிளிநொச்சி ம.வி.

## உயிர் ஓவியம்

உயிர் தந்தவர்களின்
அன்பு பரிசு தம்பி என்று
இதயத்தில் வாழவழிவைத்து
அழியாத பாசம் கொண்ட
கடமைக்கான இந்த தேசம்
காதலுக்கான தாஜ்மஹாலை விட
எம் இனம் ஒரு காவியம் என
காண்பவர் விழித்திரையில்
அழியாத உயிர் ஓவியம்

க. அபர்ணா
வட்டுக்கோட்டை

## யார் தருவார் தஞ்சம்

எஞ்சியிருக்கும்
பிஞ்சுகளிடத்தில்
பஞ்சம் மட்டுமே
மிஞ்சியிருக்கிறது
வஞ்சம் அறியா
நெஞ்சங்களுக்கு
தஞ்சம் யார் தருவாரோ...?

பி.வேதிகா
வ.கனகராயன்குளம் ம.வி.

## உறவின் மகிமை

தங்கையே!
என் உயிர் தந்தேனும்
உனை நான் காப்பேன்
ஏனெனில்
நீயும் நானும் பிறந்தது
உயிர் தந்தோர் வாழ்ந்து
போன மண் என்பதால்

அரிஷ்
கிளிநொச்சி

## துன்பத்தில் ஒரு ஒற்றுமை

குடும்பத்தையும் குதூகலத்தையும்
தொலைத்துவிட்டு
தவிக்கிறார்கள் தெருவோரத்தில்...
கட்டிக் காப்பாற்றி
கலாசாரத்தை காவு கொடுத்த
ஈழத்தமிழ் மக்களைப் போல்...

த.மோகனரூபன்
சுழிபுரம்

## மாறிவிடுங்கள்

மனிதர்களே! உங்கள்
அகக்கண்களால் பாருங்கள்
மண்ணுலகை அழிய முன்பு
மனிதம் மிக்க
மனிதர்களாக மாறுங்கள்

## யார் காப்பாற்றுவார்

கொத்துக் குண்டுகளால்
பெத்த தாயுந் தந்தையும்
செத்துப்போக...
பூத்துக் குலுங்கிய
முத்தான பிள்ளைகள்
சோத்துக்கும் வழியின்றிச்
செத்துக் கொண்டிருக்கின்றார்கள்
காத்துக் கைகொடுக்க யாருமின்றி

துரை
தென்மட்டுவில்

## தவிப்பு

பைங்கிளிகள் ரெண்டு- பாச
பந்தங்களை தொலைத்து
பட்டினியால் வாடுதடி கிளியே!
உற்றவரை தேடுதடி
உள்ளத்தவிப்போடு—உயிர்
உள்ளவரை

த. கயூதரன்
நாவற்குழி

## நீதி கிடைக்குமா?

பற்றிய பாசமதை
பாரறியும்
தம்பிகளே- உமைப்
பெற்றவர்கள்...
பிடிக்கப்பட்டனரா
புதைக்கப்பட்டனரா
யாரறிவார்?

வினுமலர் களஞ்சியம்
சாந்தை

## தாயுமானவன்

பட்டாம்பூச்சியாய்
பறக்கும் வயதில்
பாலகனைச் சுமக்கும்
தாயுமானவனே
உந்தன் கனவில்
எதனைக் காண்கிறாயோ?


வி. யுவேகா
மாவுசந்தி

## துணை கொள்

ஊழி விலகுமுன்
எம் உயிர் தந்த உறவுகள்
உடல் விட்டுப் பிரிய
அன்புக் கரமுயர்த்தி
அரவணைக்க யாருமில்லை
இனி துன்பம் களைந்தெறிய
வருவார் யார்?

பு.பிரசாந்
அல்லைப்பிட்டி

# மௌனத்தின் தேடல் -216



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 06.08.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் மிதப்பே இந்தியாவின் தோல்வி

## கவாஸ்கர் காட்டம்



லோர்ட்ஸ் டெஸ்டில் பெற்ற வெற்றியால் தான் 3-வது டெஸ்ட் போட்டியில் தோற்று விட்டனர் என முன்னாள் இந்திய அணித்தலைவர் கவாஸ்கர் குற்றம் சாட்டியுள்ளார்.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் இந்திய அணி, 3-வது டெஸ்ட் போட்டியில் 266 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்திடம் படுதோல்வி கண்டது.

இது தொடர்பாக இந்திய அணி மீது கடுமையாகச் சாடியுள்ள கவாஸ் கர் கூறுகையில், 3-வது டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு முந்தைய 5 நாளகள் இந்திய அணியினர் என்ன செய்தார் கள் என்று தெரியவில்லை.

3-வது டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் இந்திய வீரர்கள் கவனக் குறைவாக விளையாடினார்கள். களத்தடுப்பு முற்றிலும் மோசமாக அமைந்தது. முந்தைய போட்டிகளில் பெற்ற வெற்றியின் மிதப்பால் இந்திய அணி அடுத்த போட்டியில் தோற்பது என்பது 1930-களில் இருந்தே வழக்கத்தில் உள்ளது.(க)

# ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்துக்கு முன்னர் நடத்துவது குறித்து சட்ட ஆலோசனைகளை பெறுவது தொடர்பில் அரசாங்கம் உயர்நீதிமன்றத்தை நாடவிருப்பதாக அலரி மாளிகை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் உயர்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அவர் இந்தக் கோரிக்கையை விடுக்கவுள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

பதவியில் இருக்கும் ஒரு ஜனாதிபதி தமது முதலாவது பதவிக் காலத்தின் போது, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முற்கூட்டியே அழைப்பு விடுக்கலாம் என அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வரப்பட்டிருந்தது.

இதன்படி முதலாவது பதவிக் காலத்தில் அதிகாரத்தில் இருக்கும் ஒரு ஜனாதிபதி தனது முதல் பதவிக் காலத்தின் நான்கு வருட நிறைவின் பின்னர், அவரின் ஆறு வருட பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர், எந்த நேரத்திலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுக்க முடியும் என்ற ஏற்பாடு நடைமுறைக்கு வந்தது.

இதன்படி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகிய மூவரும் தங்களின் முதலாவது பதவிக் காலத்தின் போதே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே அறிவித்து தங்களின் இரண்டாவது பதவிக் காலத்தை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

ஆனால், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவை பதவிக்கு வந்ததும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று, ஒருவர் தேர்தல்கள் மூலம் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட முடியும் என அரசியலமைப்பில் மாற்றங்களைச் செய்திருந்தார். இதற்கு அரசியலமைப்பின் 18-வது திருத்தம் வழிகோலியது.

ஆனால், இவ்வாறு பல தடவைகள் ஜனாதிபதியாக வரக்கூடிய ஒருவர் தமது வழமையான ஆறு ஆண்டுகள் பதவிக் காலம் முடிவடைதற்கு முன்னர் அடுத்த தேர்தலுக்கு அழைப்பு விடுக்கலாமா என்பது தொடர்பில் இந்த 18-வது திருத்தத்தில் தெளிவாக கூறப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமது தற்போதைய பதவிக் காலம் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இருக்கையில் முற்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தயாராகி வருகின்ற நிலையிலேயே, அரசியலமைப்பின் ஏற்பாடுகள் தொடர்பில் உயர்நீதிமன்றத்திடம் சட்ட ஆலோசனைகளை பெறவுள்ளதாக கூறப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சிகளில் எதிர்க்கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில், அடுத்த பதவிக் காலத்தையும் உறுதிப்படுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரும்புவதாக அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

# தேவைப்படின் நடவடிக்கை-இந்தியா

(புதுடில்லி)

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு இணையத்தளத்தில் தமிழக முதல்வர் மற்றும் இந்திய பிரதமர் தொடர்பில் வெளியான கட்டுரைக்காக பாதுகாப்பு அமைச்சு மன்னிப்பு கோரியமை தொடர்பில் இந்திய அரசாங்கம் திருப்தி வெளியிட்டுள்ளது.

இந்த கட்டுரை பின்னர் பாதுகாப்பு இணையத்தளத்தில் இருந்தும் அகற்றப்பட்டது.

ஜெயலலிதா மோடிக்கு எழுதும் காதல் கடிதங்களால் எதனை சாதிக்கமுடியும் என்ற தலைப்பில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு இணையத்தளத்தில் நேற்றுமுன்தினம் கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது.

இது குறித்து இந்திய தரப்பு ஆட்சேபனை வெளியிட்டமையை அடுத்து அதனை இணையத்தளத்தில் இருந்து அகற்றி இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு, எவ்வித அதிகாரத்துவ அனுமதியும் இன்றி இந்த கட்டுரை பிரசுரிக்கப்பட்டதாகவும் அது இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கட்டுரை அல்ல என்றும் குறிப்பிட்டிருந்தது.

இதற்காக ஜெயலலிதாவிடமும் மோடியிடமும் பகிரங்க மன்னிப்பு கோருவதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் தெரிவித்திருந்தது.

இது குறித்து கருத்துரைத்துள்ள இந்திய வெளியுறவு பேச்சாளர் சயிட் அக்பருதீன் குறித்த கட்டுரை தொடர்பில் இந்தியா உடனடியாக இராஜதந்திர ரீதியில் செயற்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் இது தொடர்பில் உடனடியான நடவடிக்கையை மேற்கொண்டது.

இதன்மூலம் இந்தியாவின் நோக்கம் நிறைவேற்றப்பட்டது. மேலதிக நடவடிக்கைகள் தேவைப்படுமாயின் அது தொடர்பில் ஆராயப்படும்.

எனினும் விடயம் உடனடியாக உரிய தரப்புக்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறித்து இந்திய அரசாங்கம் திருப்தி கொண்டுள்ளது என்று அக்பருதீன் குறிப்பிட்டார்.

## கூட்டமைப்பு...

பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் சர்வதேச விசாரணைக்குழுவின் முன்நேரில் கண்ட சாட்சியாளர்கள் சிலர் சாட்சியமளிக்க உள்ளதாகத் தெரிய வருகிறது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை நேரில் பார்த்த சாட்சியாளர்களை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் விசாரணையாளர்கள் முன் நிறுத்த திட்டமிட்டுள்ளதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் விசாரணைக் குழுவிற்கு ஏற்கெனவே அறிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை தவிர நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் போர்க்குற்றங்கள் தொடர்பான காணொளிகள் மற்றும் புகைப்படங்களை விசாரணைக் குழுவிடம் வழங்கியுள்ளது.

அதேவேளை விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளிக்க உள்ள நேரில் பார்த்த சாட்சியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் வி.உருத்திரகுமாரன் ஐ.நாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இலங்கை...

கள் இடம்பெற்றன. இதன்போது பெரும்பாலும் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

பௌத்த பிக்குகளும் இணைந்திருந்த இந்த வன்முறையின்போது மூன்று உயிர்களும் காவுக்கொள்ளப்பட்டன.

இரவு வேளைகளில் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டிருந்தபோதும் வன்முறைகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

இதன்போது சட்டம் முழுமையாக செயலிழந்துவிட்டதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருந்தமையையும் பிரித்தானிய அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் தாக்குதல் அச்சங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு அரசாங்க அதிகாரிகளும் உடந்தையாக உள்ளனர்.

இலங்கையில் பேச்சு சுதந்திரம் தொடர்ந்தும் மீறப்பட்டு கொண்டிருக்கிறது. மாணவர்களின் போராட்டங்கள் அடக்கப்படுகின்றன.

கடந்த மே-16ம் திகதியன்று போராட்டம் ஒன்றில் ஈடுபட்ட மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது நான்கு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழக மாணவர்களும் விரிவுரையாளர்களும் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஏப்ரல் 14 ஆம் திகதியன்று யாழ்ப்பாண செய்தியாளர் ஒருவர் தாக்கப்பட்டார்.

இதனையடுத்து அரசாங்க அதிகாரி ஒருவரின் மனைவியின் புகைப்படத்தை பிரசுரித்தமைக்காக செய்தித்தாளின் ஆசிரியர் ஒருவர் விசாரணை செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண செய்தியாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்று அதிகாரிகளின் தலையீட்டினால் இரத்துச் செய்யப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமான நிலையத்துக்கு கண்காணிப்பு பணிகளுக்காக சென்றபோது அச்சுறுத்தப்பட்டனர்.

மே 17ஆம் திகதி 2009 போரினால் மரணமானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் மக்கள் நிகழ்வுகளுக்கு படைத்தரப்பினர் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தினர்.

இந்தநிலையில் எதிர்வரும் செப்டம்பரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வின்போது இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் அழுத்தங்களை பிரயோகிக்கும் என்று பிரித்தானிய மனித உரிமைகள் பிந்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமைச்சர்களான ஹக்கீம், விமல் அணிமாறத் திட்டம்-கடுப்பில் அரசு

(கொழும்பு)

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் ஆளுங்கட்சியிலிருந்து அணி மாறும் முடிவு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கடுப்பில் ஆழ்த்தியுள்ளது.

எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலின் பின் ஆளுங்கட்சியிலிருந்து விலகி, எதிர்க்கட்சியுடன் இணைந்து செயலாற்றுவது தொடர்பில் அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம் மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் இரகசிய செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பான இரகசிய தகவல்கள் உளவுத்துறை மூலம் ஜனாதிபதிக்கு கிட்டியுள்ளதாக வார இறுதி சிங்களப் பத்திரிகைகளான லக்பிம, திவயின போன்றவை முக்கிய செய்திகளாக வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம் மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் தமது அணிமாறல் தொடர்பில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இரகசியமாக சந்தித்துக் கலந்துரையாடிய விடயம் ஜனாதிபதியை கடுப்பேற்றியுள்ளது.

இதனையடுத்து இரண்டு அமைச்சர்களுக்கும் எதிரான செய்திகளுக்கு முக்கியத்துவம். கொடுக்குமாறு அனைத்து ஊடக நிறுவனங்களிடமும், ஜனாதிபதி ஊடகப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது. மேலும் இரண்டு அமைச்சர்களையும் அரசியல் ரீதியாக பழிவாங்குவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஜனாதிபதி காத்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் இது போன்றதொரு நாடகமொன்றை அமைச்சர் விமல் வீரவன்ச அரங்கேற்றியிருந்தார். அப்போது அவருடைய கட்சியுடன் ஐ.தே.க. சார்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த மையோன் முஸ்தபா எம்.பி.யை லஞ்சக் குற்றச்சாட்டிலும் சிக்க வைத்திருந்தார்.

இதன் காரணமாக இம்முறை அமைச்சர் விமலின் விடயத்தில் ஐ.தே.க. வெகு எச்சரிக்கையுடன் அணுகும் முடிவில் இருப்பதாக சிறிகொத்தா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பிரபாகரனின்...

விட்டதாக தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பஞ்சாப் மற்றும் அசாம் பிரச்சினைகளை தீர்த்தமை காரணமாக ஏற்பட்ட நம்பிக்கையால், இலங்கை பிரச்சினையையும் தீர்த்துவிடலாம் என்று ராஜீவ் காந்தி எண்ணியதாக நட்வர் சிங் குறிப்பிட்டுள்ளார்.

## கச்சதீவில்...

உரிமையை தமிழக மீனவர்களுக்கு உறுதிபடுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மீனவர்கள் கச்சத்தீவில் வெள்ளைக் கொடியுடன் குடும்பத்தோடு தஞ்சமடையும் போராட்டத்தை ஊர்வலமாக நேற்று சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் தொடங்கினர்.

கச்சதீவுக்குள் அத்துமீறி நுழைந்தால், தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று இலங்கை இராணுவ செய்தி தொடர்பாளர் ருவான் வணிகசூரிய எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், பாதுகாப்புக்காக இராமேஸ்வரத்தில் திரளான பொலிஸார் நேற்று சனிக்கிழமை அதிகாலையிலேயே குவிக்கப்பட்டிருந்தனர்.

மீனவர்களின் ஊர்வலம் ஆரம்பித்த சிறிது நேரத்தில், கச்சத்தீவுக்கு தஞ்சம் புகும் போராட்டத்துக்கு அனுமதி கிடையாது. மேலும் தடையை மீறி செல்பவர்கள் கைது செய்யப்படுவர் என பொலிஸார் எச்சரித்தனர்.

இந்நிலையில் மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் மீனவர் சங்க பிரதிநிதிகளுடன், இலங்கை சிறையில் வாடும் மீனவர்களையும், விசைப் படகுகளையும் விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதி அளித்தார்.

மேலும் மீனவர் பிரச்சினைகள குறித்து இராமேஸ்வரத்தில் இருந்து மீனவர் பிரதிநிதிகள் குழு டில்லியில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை மற்றும் அதிகாரிகளுடன் சந்திக்க ஏற்பாடு செய்வதாகவும் கூறினார்.

அமைச்சர் பொன். இராதா கிருஷ்ணன் உறுதிமொழியை ஏற்று மீனவர் சங்க பிரதிநிதிகள் கச்சத்தீவுக்கு தஞ்சம்புகும் போராட்டத்தை கை விடுவதாக அறிவித்தனர்.

## பாதுகாப்பு...

காரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற யோசனைகளை கூட்டமைப்பு முன்வைத்துள்ளது.

இதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை கோரியதாகவும் கொழும்பு ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களை பெற்றுக் கொள்ளதற்காக தமிழ்த் தேசிய பேரவை என்ற அமைப்பை ஆரம்பிக்கவும் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

இதனிடையே பாதுகாப்பு அதிகாரங்களை தவிர ஏனைய அதிகாரங்களை வடக்கு மாகாணத்திற்கு பகிருமாறு இந்திய அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்திடம் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் மனவுறு...

ஜெயவர்த்தன அதனை தெரிந்து கொண்டார. இதன்போதே யாழ் மேயரான அல்பிரட் துரையப்பாவை கொலை செய்தமைக்காக 'பிரபாகரனை தம்மிடம் கையளிக்குமாறும் அவரை தாம் யாழ்ப்பாணத்தில் வைத்து தூக்கிலிடப் போவதாகவும் ஜே.ஆர். ஜெயவர்த்தன, ராஜீவ் காந்தியிடம் கோரியதாக நட்வர் சிங் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, 1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் போது முக்கிய பங்காற்றிய நட்வர் சிங், பிரபாகரனுடன் தாம் பேசியமையானது சவால் மிக்க அனுபவமாக இருந்தது எனவும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது இந்திய மற்றும் இலங்கை படையினரை நேருக்கு நேர் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று பிரபாகரனிடம் தாம் தெரிவித்ததாக நட்வர் சிங் கூறியுள்ளார்.

ஆயினும் தான் இறந்தாலும் தமிழீழக் கொள்கையை கைவிடப் போவதில்லை என்று பிரபாகரன் கூறியதாக குறிப்பிட்டுள்ள நட்வர் சிங், இதன்போது பிரபாகரனின் மனவுறுதியை குறைத்து மதிப்பிட்டு

23ஆம் பக்கம் பார்க்க....


## சைவ உணவகம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை

மாதாந்த வருமானம் நிரந்தர வேலைவாய்ப்பு
(மூன்று நேர உணவு, தங்குமிட வசதி இலவசம்)

வேலையாட்கள் விபரம்



- உணவு பரிமாறுபவர்கள்
- குசினி வேலையாட்கள்
- காசாளர்
- பில் கிளார்க்
- பிரதான சமையலாளர்/ உதவியாளர்
- அலுவலக உதவியாளர் (பெண்கள்)

(7202)

(இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு 0777917753



## புறொயிலர் குஞ்சு விற்பனை

35 நாளில் 2 Kg க்கு மேல் நிறையெடுக்கக் கூடிய No 1 Green Valley புறொயிலர் குஞ்சு விற்பனைக்கு

விலை :- 86 /-

'கினிராஜ்' ஊர்க்கோழிக்குஞ்சு 70 /-
தொடர்பு :- 0777531344 திருநெல்வேலி (7197)



## Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்:KRC



## வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அண்மித்ததாகவும், கண்டி வீதியிலிருந்து இறங்கியவுடன் முதல் வீடாகவும் இல.02, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு

திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் (7201)

தொலைபேசி இல.
077 7200 839, 075 0498 617



## Omsakthi Electricals K.K.S. Road, Inuvil

சகல விதமான TV,Fridge, Washing Machin அனைத்தும் உங்கள் வீட்டிற்கே வந்துதிருத்திக் கொடுக்கப்படும். (7193)

Tharen T.P : 077 8000 748



## SHADONI COURIER SERVICE

SCS




SHADONI பொதிகள் சேவை

அழையுங்கள்
021 222 8591
077 266 6429

விரைவானதும் நம்பிக்கையானதுமான சேவைக்கு.....

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட அனைத்து நாடுகளுக்கும் 10kg இற்கு மேல் பொதிகள் அனுப்புபவர்களுக்கு விசேட விலைக்கழிவும் அதற்குக் குறைந்த நிறைகளில் அனுப்புபவர்களுக்கு விலைக்கழிவும் வழங்கப்படும்.




எதிர் வரும் 31.07.2014 வரை எமது நிறுவனத்துக்கு வருகை தரும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவும் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்படும்

SHADONI COURIER SERVICE
272, K.K.S Road - Jaffna
SCS (C-8098)



## ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்குண்டு.



தரமான ஓடுகள், செங்கற்கள் யாழ்,வன்னி போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு-077-3818799 (C-8098)

பிரணவன் என்ரபிறைசஸ்
இல:635, பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.



## Innovage Group

எமது Innovage Group நிறுவனத்தின் வலையமைப்பின் கீழ் பல்வேறு பட்ட பதவி வெற்றிடங்களுக்கு O/L,A/L படித்த இளைஞர்கள் தேவை.

- பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில்வாய்ப்பும், வெளிநாட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்
- பயிற்சியின்போது 15,000 /- பின் 40,000/-
- வயதெல்லை 18-35
- தங்குமிட வசதிகள் உண்டு.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும். (6692)

உடன் அழைக்க :-
0772302795, 0778794077



## உடனடியான வேலைவாய்ப்பு

இளைஞர்கள் யுவதிகளே! (18-50 வயது இருபாலாருக்கும்) கொழும்பை அண்மித்த பிரதான நவீன தொழிற்சாலைகளில் உடனடியான வேலைவாய்ப்பு. ஜேம்/TipTep/கிளவுஸ்/Printing/யோகட்/சொக்லட்/பிளாஸ்டிக்/ஆடை/பால்மா/தேயிலை/வாசனைத்திரவியம் போன்ற (பல தொழிற்சாலைகளில்) தயாரிப்புகளுக்கு உற்பத்தி உதவியாளர்/லேபல்/தரம் பிரித்தல்/களஞ்சியப் பிரிவுக்கும் தேவை. உணவு,தங்குமிடம் சகாய விலைகளில். (நண்பர்கள்/குழுக்கள்/தம்பதிகள் ஒரே தொழிற்சாலைகளில்) சம்பளம் 18000/-, 32000/- வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்புக்கள்.

தொடர்பு: 077 556 1883 (சி-8100)



## விற்பனையாகின்றது

வேதநாயகம் தபேந்திரன் யாழ்ப்பாண நினைவுகள் - பாகம் 01, யாழ்ப்பாணவாழ்வியல் குறித்த 30 கட்டுரைகளைக் கொண்ட நூல்.

விலை :- 390 /-

அனைத்துப் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(C-8079)


## கூட்டமை...

பட்டுள்ளது.

அதில் புலிகளின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றுள்ளனரெனத் தெரிவிக்கப் படுகிறது.

எந்தவொரு குற்றச் செயல்களிலும் தொடர்புபடாதவர்களைப் போன்றே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தலைவர்கள் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கு இடையிலான தகவல்கள் தொடர்பிலும் முல்லைத்தீவில் மீட்கப்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறெனினும் ஐக்கிய நாடுகள் விசாரணைகளில் பங்கேற்கப் போவதாகவும் அதற்கான சாட்சியங்களை ஒன்றுதிரட்டி வருவதாகவும் அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**நேரில் பார்த்த சாட்சியம்**

இதேவேளை இலங்கையில் இடம்

23ஆம் பக்கம் பார்க்க....


## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள்சேவை

விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!




திருமுருகன் கொம்நெற் (பிறைவெட்). லிமிட்டெட்

- 11kg விற்கு மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
- தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடைவைகள்
- CD, DVD என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
- 220 நாடுகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
- 3-5 வேலைநாட்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.

இல. 271A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835

TCN Express
2b Nelsan Place,
Colombo - 6.

வாரத்தில் ஏழு நாட்களிலும் எமது சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம்.

Packing & Courier

20 வருடங்களுக்கு மேல் முதன்முதலில் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனி இடம் பிடித்துள்ளது.

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, சங்கானை. (வைத்திலிங்க கட்டிடம் மேல்மாடி, ஆசை பிள்ளை நகைக்கடை முன்பாக)

குறிப்பு: எமது நிறுவனம் இங்கே குறிப்பிடப்பட்ட இடங்களில் மட்டுமே இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (7170)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழு[illegible] உள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org